பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

இம்போட்டற் நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன் பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ் வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2. 50

தரமான சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட் ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின் சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

ஈர்: 4 விபவ ஷூ தை மீ 23 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ ஆகிர் பிறை 27 (5-02-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 62

# தெற்கில் வன்செயல்களை அடக்க கடும் நடவடிக்கை

## படைகள் பழையபடி முடுக்கல்

கொழும்பு, பெப்ரவரி 5

தென்னிலங்கையில் நாளாந்தம் அதிகரித்து வரும் வன்செயல்களை அடக்குவதற்கு, கடுமையான நடவடிக்கைகளில் இறங்குமாறு பாதுகாப்புப் படைகளுக்குப் பச்சைக் கொடி காட்டப்பட்டுள்ளது.

கொழும்பில் பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட முக்கிய மாநாட்டில், தென்பகுதித் தீவிர வாதிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை முடுக்கி விடுமாறு ஆயுதப்படைத் தளபதிகளுக்கு உத்தரவிடப்பட்டது.

பிரஸ்தப உயர்மட்ட மாநாட்டில் ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர் ஜெனரல் சிறில் ரணதுங்க, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல, இராணுவத் தளபதி லெபடினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, விமானப் படைத் தளபதி வால்டர் பெர்னாண்டோ, கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஆனந்த டி சில்வா, பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட இராணுவ இணைப்பு அதிகாரிகளும் மாநாட்டில் கலந்துகொண்டு, மாவட்டங்களின் பாதுகாப்பு நிலைபற்றி எடுத்துரைத்தனர்.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் வன்செயல்களைக் கட்டுப்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பன பற்றி மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது

திருப்பி அழைக்கப்பட்ட இராணுவம் மற்றும் படையினரை பழைய இடங்களுக்கு மீண்டும் அனுப்புவது என மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது

ஜனாதிபதியாக திரு பிரேமதாச தெரிவானதும் அவசரகால நிலை நீக்கப்பட்டதும் இராணுவத்தினர் முகாம்களுக்குள் திருப்பி அழைக்கப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆளுநராக மொண்டேகு நேற்றுப் பதவிப்பிரமாணம்

கொழும்பு, பெப் 5

வடமேற்கு மாகாண ஆளுநராக மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரம நேற்று ஜனாதிபதி பிரேமதாஸ முன்னிலையில் பதவிப்பிரமாணஞ் செய்து கொண்டார்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் வெலிகம தொகுதியின் எம் பி. யாகப் பணிபுரிந்தஇவர், ஜெயவர்த்தன தலைமையிலான அரசில் பொது நிர்வாகத்துறை அமைச்சராகப் பதவி வகித்தார் திரு. ஆர். பிரேமதாஸ, ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அமைச்சரவையை மாற்றி அமைத்தபோது மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரம அமைச்சர் பதவியை இழந்தார்.

ஜனாதிபதி தேர்தலில் அவர் பிரதிநிதித்துவம் வகித்த வெலிகம தொகுதியில் ஆளுங்கட்சிக்கு அதிகவாக்குகள் கிடைக்காமற் போனதே அவர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரதினம் நேற்று கொண்டாடப்பட்டது

கொழும்பு, பெப் 5

இலங்கையின் 41ஆவது சுதந்திர தினம் தேசிய ரீதியில் உத்தியோகபூர்வமாக கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்றுக் கொண்டாடப் பட்டது.

பிரதம அதிதிகளாக ஜனாதிபதி பிரேமதாஸாவும் திருமதி பிரேமதாஸவும் கலந்து கொண்டனர்.

விசேட அதிதிகளாக முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன தம்பதிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

ஜனாதிபதி பிரேமதாஸா தேசியக் கொடியை ஏற்றி வைத்து, நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார்.

அப்போது அவர் சொன்னதாவது:-

சுதந்திரமடைந்த சமயம் நமது தலைவர்கள் எடுத்த தீர்மானங்களை நாம் நினைவுபடுத்திக் கொள்வது அவசியம்.

41 ஆண்டுகளில் பல தரப்பட்ட மாற்றங்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில்

கொழும்பு பெப் 5.

திருகோணமலையில் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனவிரத்தின தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

பின்னர் ஆளுநர், முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் உட்பட வர மக்கள் தொண்டர் படை, மற்றும் மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

பின்னர் முதலமைச்சர் பேரவையில் சுதந்திர தினத்தை ஒட்டி தமிழ்க் கைதிகள் விடுதலை செய்யப்பட்டதை வரவேற்றார். (ஒ-எ)

## ஜி. சி. ஈ. பரீட்சை அனுமதிக் கார்ட்டுகள் அடுத்த வாரம் வரும்

யாழ்ப்பாணம், பெப் 5

ஜி சி ஈ சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான அனுமதிக் கார்ட்டுகள் அடுத்த வாரமளவில் யாழ் கல்வித் திணைக்களத்துக்கு வந்து சேரும்

எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பமாகும் ஜி சி ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான நேரசூசிகைகளும், காகிதாதிகளும் அடுத்த வாரம் திணைக்களத்துக்குக் கொண்டு வரப்படும்.

இவற்றைப் பத்திரமான முறையில் யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்காக கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பு சென்றுள்ளது.

இம்முறை நாடு முழுவதும் நடைபெறவுள்ள இப் பரீட்சைக்கு 5 லட்சத்து 63 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். (ஒ-10)

## மூப்பனார் தலைவராகத் தெரிவு

சென்னை. பெப் 5

தமிழ்நாடு சட்டசபை இந்திரா காங்கிரஸ் குழுத் தலைவராக திரு ஜி கே மூப்பனார் நேற்று ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

நடந்த தேர்தலில் வெற்றியீட்டிய காங்கிரஸ் எம் எல் ஏக்கள் நேற்றுக்கூடி அவரைத் தெரிவுசெய்தனர். (உ-எ)

## ஸ்ரீலங்கா கடற்படையினர் வழங்கிய தண்டனை!

யாழ்ப்பாணம், பெப்ரவரி 5

நயினாதீவுப் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர்களையும் குடித்தவர்களையும் ஸ்ரீலங்கா கடற்படையினர் பிடித்து அவர்களுக்குப் புதுவிதமான தண்டனையை வழங்கினர்!

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

கசிப்பு வியாபாரிகளையும் கசிப்பை வாங்கிக் குடித்தவர்களையும் பிடித்த கடற்படையினர், அவர்களை கசிப்பு தயாரிக்கும் உபகரணங்கள் மற்றும் கசிப்பு கொள்கலன்கள் ஆகியவற்றுடன் ''ஊர்வலமாக'' அழைத்துச் சென்றனர்.

ஒரு சந்தியில் அவர்களுக்கு பொதுமக்கள் முன்னிலையில் கசிப்பால் ''ஸ்நானம்'' செய்வித்து, கடலில் குளிக்கச் செய்தனர்.

அதன் பின்னர் ஊர்வலம் முகாமை நோக்கிச் சென்றது.

அங்கு நைலோன் கயிற்றினால் மாறி மாறி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வதிரியில் தேடுதல்

சரவெட்டி, பெப் 5

வதிரி, கொற்றாவத்தைப் பகுதிகளில் நேற்று சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் இடம் பெற்றது.

நேற்று அதிகாலை 3 மணி முதல் வதிரி, கொற்றாவத்தை, திக்கம் ஆகிய பகுதிகளில் சுமார் 7 மணி நேரம் சுற்றிவளைப்பு, தேடுதல் இடம் பெற்றது. (உ-70)

## முச்சந்தி முரளி



கசிப்புக் காய்ச்சிறவையும், குடிக்கிறவையும் திருந்துமாப்போல இல்லை...... அவ்வளவு தான்......!

## புதுக்குடியிருப்புக்கு மாணவனின் பூதவுடல்

யாழ்ப்பாணம், பெப் 5

கடந்த 2 ஆம் திகதி பல்கலைக்கழக அசம்பாவிதத்தில் மரணமடைந்த விஞ்ஞான பீட மாணவன் சதாசிவம் ஜெகநாதனின் பூதவுடல் நேற்றுக்காலை 8 மணியளவில் அவரது சொந்த ஊரான புதுக்குடியிருப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது

கடந்த 2 ஆம் திகதி மரணமடைந்த ஜெகநாதனின் பூதவுடல் நேற்று முன்தினம் நண்பகல் 2 மணியளவில் ஆஸ்பத்திரியில் இருந்து பல்கலைக்கழகத்திற்குக் கொண்டு வரப்பட்டு நேற்றுக்காலை வரை மருத்துவ பீடத்தில்

[8-ஆம் பக்கம் பார்க்க]

## சுபநேரம்

05 02-1989
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9 35 முதல் 11 05 வரை
ராகுகாலம்:
05 05முதல் 06 35 வரை
போதாயன அமாவாசை

## யாழ். மாவட்டத்தில்

## சட்ட விதிகளுக்கு மாறாக கட்டடங்கள் அமைப்பு

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ் மாவட்டத்தில் சட்ட விதிமுறைகளுக்கு முரணானவிதத்தில் நிரந்தரமான கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சட்ட ஒழுங்குகளைமீறி அமைக்கப்படும் கட்டடங்களை அகற்றுவதற்குப் பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சட்ட அதிகாரம் உண்டு.

— பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

விதிப்பராமரிப்பு வேலைகளை ஒழுங்குபடுத்துவதற்கென்று விதிகள்'ஏ', 'பி', 'சி' என மூன்றுபிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன

வீதிகளின் ஓரங்களில் அமைக்கப்படும் நிரந்தரக் கட்டடங்கள்—

'ஏ' பிரிவு வீதியி

(8ஆம் பக்கம் பார்க்க)

## செம்பியன்பற்று பகுதியில் இருவர் பலி! இருவர் காயம்!!

யாழ்ப்பாணம் பெப் 5

செம்பியன்பற்று 17ம் கட்டைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது

இச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டனர் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இராசையா தேவதாசன் (வயது 30) சின்னத்தம்பி நவீந்திரன் (வயது 28) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது

பி. தங்கராணி (வயது 35) அவரது 13 வயது மகன் சுபாஷ்சந்திரன் ஆகியோரே காயமடைந்தனர். தங்கராணியின் இடது கால் யாழ் ஆஸ்பத்திரியில் வைத்து அகற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பாளர் இருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, பெப் 5

பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இருவர் நேற்று தென்பகுதியில் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

இவர்களுடன் சேர்த்து இதுவரை 12 வேட்பாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டனர். (ஒ-எ)

## நாளை பிரேமா யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம்,பெப் 5

நாளை விசேட விமானம் மூலம் யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாஸவுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

ஜனாதிபதியுடன் சிரேஷ்ட அமைச்சர்களும், இராணுவ, பொலிஸ் உயர் அதிகாரிகளும் வருகை தரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி திரு. பிரேமதாஸ நாளை காலை யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலும், புங்குடுதீவிலும் கூட்டங்களில் பேசுவார். (ஒ-10)

## அக்கராயன் பகுதியில் பதற்றம் பொதுமக்கள் இடம்பெயர்வு

வட்டக்கச்சி, பெப் 5

அக்கராயன்குளம் பகுதியில் கடந்த புதன்கிழமை முதல் இடம் பெற்றுவரும் மோதல் சம்பவத்தினால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகிறது

பீதியினால் இப்பகுதியிலிருந்து பெரும் எண்ணிக்கையானோர் கிளிநொச்சிப் பகுதியை நோக்கி இடம்பெயர்ந்த வண்ணம் இருக்கின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களில் ஒருபகுதியினர் கிளிநொச்சி புனித திரேசா தேவாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இதே சமயம் அக்கராயன் குளத்திற்கு அருகாமையில் உள்ள யூனியன் குளம் என்ற இடத்தில் கடந்த புதன் கிழமை பகல் 10 மணியளவில் இடம் பெற்ற கண்ணிவெடி மற்றும் மோதல் சம்பவங்களில் மூன்று படையினர் உயிரிழந்ததாகவும்-

அதேயிடத்தைச் சேர்ந்த நான்கு விவசாயிகளும் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த நால்வரில் மூவரின் பெயர் விவரங்கள் கிடைத்துள்ளன.

மு. பாலசுப்பிரமணியம் (வயது 30) ஆர். உதய குமார் (வயது 28) தர்மகுலசிங்கம் (வயது 28) ஆகியோரே அந்த மூவருமாவர்.

இறந்தவர்களின் சடலங்கள் அவர்களது உறவினர்களிடம்ஒப்படைக்கப்பட்டது.

சடந்த புதன்கிழமை

(8ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்ஸுக்கு காத்துநின்றவர் சூடுபட்டு உயிரிழந்தார்

வட்டக்கச்சி, பெப் 5

அக்கராயன்குளம் நீர்ப்பாசனக்கிளை அலுவலகத்தின் முன் பஸ்ஸிற்காக காத்து நின்றவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

கழிபுரத்தைச் சேர்ந்த எஸ். முதலி (வயது 47) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. அங்கு பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (உ-163)

## பல்கலைக்கழக சம்பவம்; ஈ.பி.ஆர்.எல்.எப். கண்டனம்

யாழ்ப்பாணம், பெப் 5

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்து ஈ பி ஆர். எல். எவ். இயக்கம் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

''பல்கலைக்கழக மாணவர்களே!மோதல்களுக்கு மூலகாரணம் யார்?'' என்ற தலைப்பில் இந்தத் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தின் பின்னணி தான் என்ன? இத்தகைய கொலைகள் தொடர்வதை நாம் எவ்வாறு தடுத்து நிறுத்துவது என்பன போன்ற கேள்விகள் எம்முன் பூதாகாரமாக உருவெடுத்துள்ளன. இதற்கான சரியான உறுதிமிக்க ஆக்கபூர்வமான பதிலை முன் வைக்காவிட்டால் வெளியில் இன்னும் பல அப்பாவிகளின் உயிர்கள் பறிக்கப்படுவது தவிர்க்க முடியாதது.

எது எவ்வாறிருப்பி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கவலைதெரிவித்து துண்டுப் பிரசுரம்

யாழ்ப்பாணம், பெப்.5

யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. சண்முகலிங்கத்தின் இறப்பால் ஏற்பட்டிருக்கும் வேதனையையும் துன்பத்தையும் பகிர்ந்து கொள்வதாகத் தெரிவித்து ஈழமாணவர் பொதுமன்றம் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டிருக்கின்றது.

'ஆசிரியர் சண்முகலிங்கத்தின் படுகொலைக்குச் சூத்திரதாரிகள் யார்?' என்ற தலைப்பில் இந்தத் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது,

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

Honda Reconditioned புதிய Model C D 50 C 50, C 70 Chaly M D 90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. No 390, மெயின் வீதி, பஸ்ரியன் சந்தி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (9445)

நல்ல பாவிப்பிலுள்ள English ஒற்றைக் கதவு பெரிய இரும்புப் பெட்டி உடன் விற்பனைக்கு உண்டு ய வனு எலக்ரோ பிளேற்றேர்ஸ், No 7 கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம். [9327]

Usha Deep - Freezer Guarantee Card உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ரஞ்சன் ஹன்டி, 'ஹன்டிகொட்' உரும்பராய் [9453]

பாவித்த தளபாடங்கள், கம்பளம், நிலவிரிப்புகள், Type writer கட்டில், மெத்தை Hall-set, அலுமாரி, Cutlery set. T. V Stand, Show case, Piano மற்றும் பல உடன் விற்பனைக்கு உண்டு. 126/1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, நல்லூர். (நீர்வள சபை அருகில்) 9466)

பாவித்த தளபாடங்கள், அலுமாரி, கட்டில், கண்ணாடி மேசை, Parm. மேசை, Oven, Boiler Pyrexware, Book Rack, Hall - set செற்றி, குளிர்சாதனப் பெட்டி, Wheel - Chair, T. V Stand மற்றும் பல மலிவு விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. 790, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, நல்லூர். (9465)

நல்ல பால் ஆடு குட்டியுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி. (9330)

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், குப்குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை நல்லூர். (C-1178)

**விற்பனையாளர்கள் தேவை**

யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல இரும்பு வியாபார நிறுவனத்திற்கும், மர வியாபார நிறுவனத்திற்கும் விற்பனையாளர்கள் தேவைப்படுகின்றனர்: விண்ணப்பகாரர் 18 - 35 வயதிற்குட்பட்டவராகவும் மேற்படி வியாபாரத்தில் அனுபவம் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம் முழு விபரங்களுடனும் நற்சாட்சிப் பத்திரங்களுடனும் விண்ணப்பிக்கவும் விண்ணப்பிக்க வேண்டிய விலாசம்: இல. 443, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (9319)

**கோழித்தீன்**

"மல்டி றேட்ஸ்" இல. 234/C, பிரான்ஸி வீதி, (ஸ்ரீதர் தியேட்டருக்கு முன்பாக) உங்களுக்குத் தேவையான பிறிமா அத்துடன் சோப்பறேஷன் கோழித்தீன் வகைகள் சகலவற்றுடன் தேங்காய்ப் பிண்ணாக்கும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (9104)

**கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm**

கறுப்பு (புள்ளி) சேவல் குஞ்சு ஒவ்வொரு வாரமும் குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9, சந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) 9450)

நாற்பத்தைந்து நாட்களில் வளர்ச்சியடையும் (Dekalb) பிறவுண் சேவற்குஞ்சு (8-2-89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். விலை ரூ 4/50 முன்கூட்டியே பதிவுசெய்க. இல 9, சந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) [9449)

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள். Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள். Hyline கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை நல்லூர். [C/1177]

**தேவை**

டெமிகாவ் பிளேட்டின் மிசின் (Demy Half Platin Machine) தேவை தொடர்பு கொள்ளவும். செட்டியார் அச்சகம், 430, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (9464)

**மணப்பெண் தேவை**

B Sc விஞ்ஞான பட்டதாரி ஆசிரியருக்கு 33 வயதிற்குட்பட்ட யாழ். இந்து வேளாளகுல மணப் பெண் தேவை. விஞ்ஞான / கலை பட்டதாரி, கணக்கியல், கம்பியூட்டர் துறையைச் சேர்ந்தவர்கள் விரும்பப்படுவர். சீதனம் பேசித்தீர்க்கலாம் சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 441, மே/பா, உதயன் யாழ்ப்பாணம் (9307)

**ஆட்கள் தேவை**

எமது தொழிற்சாலையில் உற்பத்தியாகும் சவர்க்கார வகைகளை விற்பனை செய்வதற்கு ஆட்கள் தேவை விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 32, C/o உதயன் (9467)

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

9-1-89 இலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட சகல வகுப்புகளும் 6-2-89 இல் மீண்டும் பழைய நேரசூசிப்படி ஆரம்பமாகிறது. S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (9143)

புதிய பிரிவு காலை 6 — 7 30 மணி வரை திங்கள், புதன் நாட்களில் மட்டும். ஆரம்பம் 6-2-89. S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (9144)

**O/L ENGLISH**

பழைய பாடத்திட்ட மீட்டல் வகுப்புகள் ஆரம்பம் 6 2-89 மாலை 5 மணி — 6 மணிவரை கிழமை நாட்களில் 15 வகுப்புகள் தொடர்ச்சியாக நடைபெறும். S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (9431)

**NEW CITY TRADERS**

சகலவிதமான T V டெக், ரேடியோ, அன்ரனா பூஸ்ரர், வயர் பைப் செற் T D K, Maxell Audio Video கசற் வீட்டுக்குத் தேவையான மணிக்கூடு. சிறுவர் விளையாட்டுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளச் சிறந்த ஸ்தாபனம்: New City Traders 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/1522)

**தவறிவிட்டது**

கமலாதேவி வேலுப்பிள்ளை, (161, புதிய செம்மணி வீதி) ஆகிய எனது அடையாள அட்டை இல 476642000V தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் அல்லது மேலுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும் (9456)

யாழ்ப்பாணம் ஓட்டுமடப்பகுதியில் எனது 1 பவுண் நிறையுள்ள பவுண் காப்பு 15-1-89 ஞாயிற்றுக்கிழமை தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (9328)

**வாடகைக்கு**

அதிகார் வீ, சோப்பாய் தற்கில் உள்ள விசாலமான மோட்டர் போட்ட தண்ணீர் வசதியும், மின்சாரமும் உள்ள வீடு 'யமுனை' வாடகைக்கு விட உள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ந செல்வரத்தினம் 'நித்தியா' நாசிரார் கோயிலடி பழம்றோட்டு. கோப்பாய் தெற்கு. [9329]

**ஆடருக்குச்செய்து கொடுக்கப்படும்**

திருமண பிறந்த தின வைபவங்களுக்கான அலங்கார கேக் வகைகள் ஆடருக்குப் பெற்றுக்கொள்ளலாம். ஏ. சி. எஸ். தொகுதி ஸ்தாபனங்கள், பொலிஸ் முன்பாக, சுன்னாகம் C/1417

# வாடிக்கையாளர் நன்மைகருதி "சீ பாங் வீசா" அட்டைமுறை

## இலங்கை வங்கியில் யாழ் பிராந்திய தலைமை அலுவலகம் செயற்படுத்தும்

யாழ்ப்பாணம், பெப்.5

இலங்கை வங்கியின் யாழ் பிராந்திய தலைமை அலுவலகம் வடபகுதி வாடிக்கையாளர்களுக்கு சீ பாங் வீசா அட்டை முறையை Credit Card System) விரைவில் அறிமுகப்படுத்தவிருக்கிறது.

இதுசம்பந்தமான உயர்மட்ட மாநாடு ஒன்று எதிர்வரும் வாரம் கொழும்பில் நடைபெற இருக்கிறது.

யாழ். இலங்கை வங்கியின் உயரதிகாரிகளும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளனர்.

இதே வேளையில் சீ பாங் வீசா அட்டை முறை குறித்து போதிய விளக்கங்களை அளிக்கும் பொருட்டு யாழ் மாநகரிலுள்ள வர்த்தக நிறுவனங்களின் பிரதிநிதிகளையும், தனியார்துறையின் பிரதிநிதிகளையும் கருத்தரங்கு ஒன்றுக்கு இலங்கை வங்கியின் யாழ் அலுவலகம் அழைக்கவிருக்கிறது.

யாழ் மாநகரிலுள்ள தனியார் மருத்துவமனைகள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உட்பட மற்றும் வர்த்தக நிறுவனங்களில் இந்த சீ பாங்க் வீசா அட்டையை சமர்ப்பித்து வாடிக்கையாளர் தமக்குத் தேவையான சேவைகளையும், பொருள்களையும் பெற்றுக் கொள்ள இலங்கை வங்கி ஏற்பாடு செய்திருக்கிறது.

பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக பொதுமக்கள் பெருந்தொகையான பணத்தைக் கொண்டு செல்வதனால் ஏற்படும் அபாயங்களைத் தடுக்கும்நோக்கத்துடனேயே வடபகுதியிலும் இந்தத் திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படவிருப்பதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் திட்டத்துக்கென வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டிருக்கும் நவீன இயந்திரசாதனங்கள் விரைவில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட உள்ளன. (இ-ஐ)

## கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளையிலும் விரைவில் பணப் புழக்கம்

கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளையிலும் வெகு விரைவில் பணப்புழக்கம் ஆரம்பிக்கப்பட உள்ளது

பாதுகாப்புக் கருதி கிளிநொச்சி பொலீஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள தபாலகத்தில் இந்தப் பணக் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் நடைபெற உள்ளன.

கடந்த புதன்கிழமை தபாலகக் கட்டடத்துக்கு வங்கியில் இருந்து தளபாடங்களை மாற்றும் வேலைகள் நடைபெற்றன என்று தெரிவிக்கப்பட்டது.

மற்றும் அடகு நகைகள் கொழும்பிலிருந்து வந்தவுடன் மீளக் கொடுக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-163)

## ஓய்வு

சாவகச்சேரி, பெப். 5

மட்டுவில் மகாவித்தியாலய கொத்தணி அதிபர் திரு. ஆ. செல்லையா 37 வருட ஆசிரிய சேவையின் பின்பு ஓய்வு பெற்றார். (இ-31)

# பல்கலைக் கழக மாணவர்களுக்கு ஆங்கில அறிவு அத்தியாவசியம்

மானிப்பாய், பெப் 5

'பாடசாலைமட்டத்தில் உயர் வகுப்புகளில் ஆங்கிலத்தைக் கட்டாயமாகப் போதிக்கவேண்டும். ஆங்கில அறிவு பல்கலைக் கழகம் புகும்பொழுது விரிவுரைகளை விளங்கிக் கொள்ளவும், உசாத்துணை நூல்களை வாசிப்பதற்கும் மாணவர்களுக்கு உறுதுணையாக அமையும்

பாடசாலைகளில் மாணவர்கள்பெறும் ஆங்கில அறிவு பல்கலைக் கழகம் புகும்போது அத்திபாரமாக அமைவதால் உயர் வகுப்புகளில் ஆங்கில அறிவு அவசியம் என வலியுறுத்த விரும்புகிறேன்'.

மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரியில் நடைபெற்ற வெள்ளிவிழா இறுதிநாள் நிகழ்ச்சிகளில் உரையாற்றுகையில் யாழ் பல்கலைக்கழகக் கலைத்துறைப் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இறுதிநாள் நிகழ்ச்சி பரிசளிப்பு விழாவாக நடைபெற்றது.

மணவத் தலைவிகளுக்கு திருமதி எம் பாலகிருஷ்ணன், திருமதி பி பத்மநாதன், திருமதி எஸ் கல்யாணசுந்தரேசன் ஆகியோர் சின்னம் சூட்டினர்

மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ் கல்யாணசுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேராசிரியர் திரு என் பாலகிருஷ்ணன் மேலும் கூறியதாவது;-

ஆங்கிலக் கல்வியைப் பாடசாலைகளில் போதிப்பதில் பலவசதியீனங்கள் உள்ளன

ஆசிரியர் பற்றாக்குறை, ஏனைய குறைபாடுகள் உள

உயர்கல்வியை மேற்கொள்ள உள்ள மாணவர்கள் ஆங்கிலக் கல்வியைப் பயில்வதன்மூலம் பல்கலைக் கழகத்தில் உசாத்துணை நூல்களை வாசித்து விளங்கிக் கொள்ளவும் முடியும்.

ஆங்கிலக் கல்வியைப் போதிப்பதில் பாடசாலைகளுக்குப் பெரும் பங்கு உண்டு.

அதற்கான நேர அட்டவணைகள் இருப்பினும் ஆசிரியப் பற்றாக்குறை, ஊக்கமின்மை, அசட்டை காரணமாக ஆங்கிலக் கல்வி போதிக்கப்படாமல் விடப்படுகிறது

கிராமப்புற, நகர்ப்புற பாடசாலைமாணவர்களுக்கிடையில் ஆங்கில அறிவில் பெரும்இடைவெளி காணப்படுகிறது.

இதனை நிவர்த்திசெய்ய ஆங்கில ஆசிரியர்களும், அதிகாரிகளும் முன்வர வேண்டும்.

மாணவர்கள் ஆங்கிலத்தில் பேசமுடியாவிடினும் அவர்கள் ஆங்கிலத்தை வாசித்து விளங்கிக்கொள்ளும் அளவுக்கு ஆசிரியர்கள் பயிற்றுவிக்கவேண்டும். இப்படி அவர் கூறினார்.

திருமதி எம் பாலகிருஷ்ணன் மாணவிகளுக்குப் பரிசு வழங்கினார்.

சட்டத்தரணி திரு. சிவா இராஜேந்திரன், கல்வி அதிகாரி திரு எஸ் தனஞ்செயன், பொறியியலாளர் திரு எஸ் பத்மநாதன், திருமதி ம.பரமசாமி, செல்விகள் கீதா விநாயகமூர்த்தி, எஸ். யசோதா ஆகியோரும் உரையாற்றினர் (ச-90)

## இட மாற்றம்

முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி அதிகார சபைகளில் உள்ளூராட்சிச்சேவைப்பொதுஎழுதுவினைஞராகப் பலஆண்டுகள் கடமையாற்றிய திரு ஆ சி சுப்பிரமணியம், யாழ் மாநகராட்சி மன்றத்துக்கு இடம் மாற்றம் பெற்றுள்ளார். (க)


**New Science Academy**

B. M. C முன்பாக, JAFFNA.

**89 A/L DAY PAPER CLASS PHYSICS**

Mr. மணியம் (B.Sc.)

திங்கள், புதன், வெள்ளி காலை 7-00 மணி (C 1444)

**விற்பனையாகின்றது:**

ஆண்டு 2, ஆண்டு 3, கணிதப் பயிற்சி செயல்நூல்

புதிய பாடத்திட்டத்திற்கானது)

வெளியீடு

ஆ. வி. அச்சகம், யாழ்ப்பாணம்

விற்பனை: ஞானசுரபி புத்தகக் கம்பனி C/1441)

**NEW SCIENCE ACADEMY**

B. M. C. முன்பாக — JAFFNA.

**89 A/L DAY CLASS**

PURE தளக் கேத்திர கணிதம்

APP. உராய்வு

ஆசிரியர்:

**Mr. பிரேம்நாத், B Sc**

ஆரம்பம்:- 06 - 02 - 1989

திங்கள் காலை 10-30

குறிப்பு: ஆசிரியரின் ... வனத்தில் தொடர்ந்து நடைபெறும் (C/1443)

**'நான்' சிறப்பிதழ் 15 ஆவது ஆண்டு**

நான் உளவியல் மஞ்சரியில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரித்து பயன்பெற விரும்புவோர் தாமதியாது விண்ணப்பிக்கவும்.

முகவரி:

**வசந்தகம்,**

நான் மஞ்சரி அலுவலகம்,

சுவாமியார் வீதி,

கொழும்புத்துறை.

நான் வெளியீடுகள் அனைத்தும் பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் எமது காரியாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம். (8948)

**நன்றி நவிலல்**

**இரத்னு — கௌரி**

கடந்த வெள்ளிக்கிழமை (27-01-1989) இறைவன் திருவருளால் இனிதே நடந்தேறிய எமது திருமண வைபவத்தில் நேரில் கலந்துகொண்டு ஆசீர்வதித்து, பரிசுகள் வழங்கி வாழ்த்திய உற்றார் உறவினர், நண்பர்களுக்கும் வெளியூர்களில் இருந்து வாழ்த்துக்கள் அனுப்பிய அன்பர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இரத்தினசிங்கம் - கௌரி தம்பதி (இரத்னு)

'ஸ்ரீரங்கம்' கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(C/1187)

**★ தாவரவியல் ★**

**A/L 89**

**New Science Academy**

B. M. C முன்பாக Jaffna

06 - 02 - 1989 முதல்

கிழமை நாட்களில்

(திங்கள், தொடக்கம் வெள்ளிவரை)

12 30 p.m — 2.00 p m

**திரு. பொ. ஐங்கரநேசன்**

**திரு. வி. எஸ். குணசீலன்**

- ★ புதிய உடல் அமைப்பு இனப் பெருக்கம் (திங்கள், புதன்)
- ★ உருவவியல் (செவ்வாய், வெள்ளி)
- ★ விஞ்ஞான விளக்கங்கள் (வியாழன்)

● குறிப்பு:- மாணவர் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

இப்பிரிவுக்கான அனுமதிகள் யாவும் 06 - 02 - 1989 வரை மட்டுமே

(C-1446)

**முக்கிய அறிவித்தல்**

5-2 89 ஆம் திகதியன்று அதிஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிஷ்டலாபச்சீட்டு தவிர்க்க முடியாத காரணத்தால் 5. 3. 89க்கு பின்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

நிர்வாகிகள்,

**புனித மிக்கேல் சனசமூக நிலையம்**

உரும்பராய். [8950]

**SUN VIDEO COMPLEX**

K.K.S.ROAD, THAVADY

வீடியோ பட உலகில் முன்னணியில் திகழும் எமது நிறுவனத்தின் தாவடியில் மிகவிரைவில் அமையவிருக்கும் அலுவலகத்திற்கு கீழ்வரும் பதவிகட்கு உடனடியாக ஆட்கள் தேவை.

(i) காசாளர் + கணக்காளர் (பெண்)
(ii) வீடியோ கமெரா இயக்குனர்
(iii) வீடியோ கமெரா இயக்குனர்-பயிலுனர் (இருபாலாரும்)
(iv) லயிற் Light) உதவியாளர்
(v) லயிற் உதவியாளர் பயிலுனர் (இருபாலாரும்)

குறிப்பு:
A : i, ii, iv — முழுநேரம்-நிரந்தரமானது
B : ii, iii, iv, v — தற்காலிகமானது - பகுதிநேரம்

தாவடி, கொக்குவில், கோண்டாவில், இணுவில் மானிப்பாய், உரும்பராய், பகுதியில வதிவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

தகுதி நற்சான்றுப் பத்திரங்களுடன் 7ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

**SUN VIDEO COMPLEX**

RAJCOT'SCHOOL LANE, KONDAVIL WEST

[C 1448]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் நிவாரண வேலைகள் துரிதம்

## ரூபா 2000 முதல் 15,000 வரை வழங்கப்பட்டு வருகின்றன

வட்டக்கச்சி, பெப். 5

கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒருங்கிணைந்த உதவித் திட்டத்தின் கீழ் பல்வேறு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

விவரம் வருமாறு.

75 குடும்பங்களுக்கு மீள் குடியேற்றத்திற்கு தலா 2000 ரூபா. 1184 குடும்பங்களுக்கு தொழில் இழப்பு நிவாரணம் தலா 4,000/- ரூபா. 118 குடும்பங்களுக்கு வீட்டு அழிவு நிவாரணம் 15,000/- ரூபா. 718 குடும்பங்களுக்கு வீட்டுப் புனர்நிர்மாண நிவாரணம் தலா 2,250/- ரூபா. கட்டடப் பொருள்களுக்கான வவுச்சர் தலா 12,750/- ரூபா ஆகியன கணிசமான எண்ணிக்கையான குடும்பங்களுக்கு மூன்று விதமான நிவாரணமும் சேர்ந்து மொத்தம் 21,000/- ரூபா, கிடைத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேலும் 24 000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இம் மாவட்டத்தில் உயிர் இழந்தவர்களின் 14 குடும்பங்களுக்கு தலா 50,000 ரூபா முதல் 75,000 ரூபா வரை வழங்கபட்டுள்ளன.

இவ் வருடம் புனர்நிர்மாண அமைச்சினால் முன் வைக்கப்பட்ட கூடிய வருமானம் பெறும் வர்த்தக ஸ்தாபனங்களுக்கு கடன் வழங்கவும் -

கூடிய வருமானம் பெறுபவர்களின் வீடுகளைத் திருத்தி அமைப்பதற்கு வங்கிகளுடன் பெற்றுக்கொள்ள உதவி செய்யவும் -

கிராமசேவை அலுவலர்களும் உதவி அரசாங்க அதிபர்களும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ் துரைராசா இத்தகவலைத் தெரிவித்தார்.

(க - 163)

# மேலதிக நேரவேதனம் பற்றி வைத்தியர்சங்கர்தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப் 5

இலங்கையில் ஏனைய சுகாதாரப் பிராந்தியங்களில் கொடுக்கப்படும் மேலதிக நேர கடமை வேதனம் யாழ்ப்பாணப் பிராந்தியம், வவுனியாப் பிராந்தியம் ஆகியவற்றில் இதுவரை கொடுக்கப்படாததையிட்டி ஆழ்ந்த கவலையும் அதிருப்தியும் தெரிவிக்கின்றோம்.

பதிவு உதவி வைத்தியர் சங்க வடமாநிலக் கிளை அண்மையில் நடைபெற்ற அதன் ஸ்தாபகக் கூட்டத்தில் மேற்சண்ட தீர்மானத்தை எடுத்தது

இக்கூட்டத்தின் ஆரம்பத்தில் வவுனியா சுகாதாரப் பிராந்திய பணிப்பாளர் டாக்டர் வசந்தநாதனின் அகாலமரணத்துக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது [க-18]

# பூட்டு உடைந்த தபால்பெட்டி

நெடுங்கேணி பெப் .5

நெடுங்கேணி பிரதம தபாலகத்திற்கு முன்னால் இருக்கும் தபால் பெட்டி பூட்டு உடைந்த நிலையில் ஒரு வருட காலமாக இருக்கிறது. இதனால் பொது மக்கள் தமது கடிதங்களை இப்பெட்டிக்குள் போடத்தயங்குகின்றனர்.

(ச - 108)

### அரசின் திட்டங்களால்

# பணம் படைத்தோருக்கே கல்வி என்றநிலைமாறிவிட்டது

'ஏழைக்குழந்தைகள் தமது திறமையைக் காட்டும் பொருட்டு நமது அரசு இலவச பாட நூல்களை பல லட்சம் ரூபா செலவில் அச்சிட்டு வழங்கி வருகின்றது. முன்னொரு காலத்தில் பணம் படைத்தவர்களின் குழந்தைகள் தான் கல்வியைக் கற்று முடிந்தது தற்போது அந்த நிலைமை மாறியுள்ளது

கல்முனை கார்மெல் பாத்திமக் கல்லூரியில் இலவச பாட நூல்கள் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய கல்முனைக் கோட்டக் கல்வி அதிகாரி ஜனாப் ஐ எம். இஸ்ஸதீன் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி துணை அதிபர் திருமதி கே. செபரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில்:- 'சிறப்பு வாய்ந்த நற்பிரஜைகள் கல்வியின் மூலமாகத்தான் உருவாக்கப்படுகின்றார்கள். இந்த அரசு இலவசப்புத்தகங்களை மாத்திரம் வழங்குவதுடன் நில்லாமல் பகல் நேர உணவாக பணிஸ், பால் ஆகியவற்றையும் இலவசமாக மாணவர்களுக்கு இந்த வருடம் முதல் வழங்கவிருக்கிறது'' என்றும் கூறினார்.

கல்லூரி அதிபரான திருமதி விலா தேவமனோகரன் நன்றியுரை கூறினார். (க- 84)

# அறுவரின்குடும்பங்களுக்கு நஷ்டஈடு கிடைக்கும்

மன்னார், பெப் 5

சிலாபத்துறை பகுதியில் உள்ள கொக்குப்படையான் என்ற இடத்தில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதத்தில் உயிரிழந்த அறுவரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு ஜெபநாயகம் தெரிவித்தார.

இக்குடும்பங்களுக்கு மரணச் சடங்குச் செலவுக்கு தலா 2,000 ரூபா வழங்கப்பட்டது

(ச-ரி)

# புதிய நூலகம்

நானாட்டான் அரிப்புத்துறையில் செங்கோல் மாதா திருவிழாவின் போது அப்பகுதி பங்குத்தந்தை அருட் திரு நவரத்தினம் அடிகளார் புதிய நூல் நிலையம் ஒன்றைத் திறந்து வைத்தார்.

இப்பகுதி உயர் வகுப்பு மாணவர் அமைப்பின் அயராத முயற்சியால் சுமார் 10,000 ரூபா பெறுமதியான நூல்கள் இந்த நூலகத்திற்கு கிடைத்துள்ளன (ச ரி)

# நூல் வெளியீடு

தாளையடி பெப் 5.

கிளிநொச்சியில் ''உதயம்'' என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது.

# மயிலிட்டி கரையோரப்பகுதி மீனவருக்கும் ரூபா 4,000

## நிவாரணம் வழங்க நடவடிக்கை

காங்கேசன்துறை பெப்5

மீன தொழில்களை ஆரம்பிப்பதற்கான அரசின் 4,000 ரூபா நிவாரண உதவியை மயிலிட்டி கரையோரப் பகுதி மீனவர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மயிலிட்டிப் பகுதி மீனவர்கள் பெரும் முதலீடு செய்து ஆழ்கடல் ஆழ் கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

அவர்கள் வன்செயல்களால் பாதிக்கப்பட்டு மீன தொழில்களை ஆரம்பிக்க முடியாதிருக்கின்றனர்.

இது குறித்து மயிலிட்டிக் கரை பிரஜைகள் குழு வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபரூடாக யாழ். அரச அதிபருக்கு தெரியப்படுத்தியிருந்தது.

இதனை அடுத்தே இந்த மீனவர்களுக்கு மீள தொழில்களை ஆரம்பிப்பதற்கான 4,000 ரூபாவை வழங்க அரசாங்க அதிபர் அங்கீகாரம் அளித்துள்ளார் என்றும் இதனை வழங்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் மயிலிட்டிக் கரை பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. செ. தனபாலசிங்கம் தெரிவித்தார். (இ-68)



இது ஒரு தையல் தொழிற்சாலை என்று எண்ணத் தோன்றுகிறதா? அப்படி நீங்கள் நினைத்தால் அது தவறு. வன் செயல்களினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தினர் வழங்கிய தையல் இயந்திரங்களைப் பெற்ற பின் ஒவ்வொருவரும் தமக்குரிய தையல் இயந்திரங்களுடன் பூரித்து நிற்பதையே இங்கு காண்கிறீர்கள்.

தையல் இயந்திரங்களை வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் யாழ் வை. எம் சி. ஏ மண்டபத்தில் நடைபெற்றது

படம்: எஸ் சர்வானந்தா

# காங்கேசனில் நிவாரணம்

யாழ்ப்பாணம், பெப் 5

உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடைப் பணம் வழங்கும் திட்டத்தின் கீழ் 69 பேருக்கு தலா நாலாயிரம்ரூபா காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளையில் இன்றுஞாயிற்றுக்கிழமை வழங்கபபடுகிறது.

தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவில் மாவிட்டபுரம் கிராம சேவகர் பிரிவில் 31 பேரும் வீமன்காமம் கிராமசேவகர் பிரிவில் 38 பேரும் இந்த நிவாரணத்தைப் பெறுவார்கள். (இ-10)


# "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

## நிலையானமுதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984→85 | 1985→86 | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்திய பின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

# நம்பிக்கையுடன் சேமிக்க

# "ஷப்ரு" வை நாடுங்கள்

## நிதித்துறையில் உங்கள் நண்பன் அவனே!

### பணிப்பாளர் சபை

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்,
(A. I. B. Lond.).
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B. Lond.).
பொது முகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி,
(B. A. (Hons.)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

# SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 22073—24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு-4
தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனையாளர்கள் ★ தேவை ★

உலகமக்கள் அனைவரினதும் அபிமானம் பெற்ற

**பேசும் கம்பியூட்டரை**

விற்பனை செய்ய விற்பனையாளர்கள் தேவை

✶ மிகக் கவர்ச்சியான விலைக்கழிவு வழங்கப்படும்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**"TEC SRILANKA"**
(Sole Agents for "LASER" Computer's)
40/1, Nawala - Narahenpita Road,
NAWALA.
Telephone: - 565970, 562145



# NEW SCIENCE ACADEMY

B. M. C. முன்பாக JAFFNA.

**90 A/L புதிய பிரிவு**

சனி, ஞாயிறு வகுப்புக்கள்.

PHY - மணியம் — 7. 30 a. m
(Light)
ZOO - பரம் — 8. 30 a. m
(அலகு 4)
BOT - ஐங்கரநேசன் — 10. 00 a. m
(அலகு 4)
CHE - சத்தீஸ் — 11. 00 a. m.
(General)
PURE } MATHS
APP } வெக்டர் வேலாயுதம்
10 - 30 — 12 - 30
(C/1432)



# கடை வாடகைக்கு

சுன்னாகம் பழைய பொலிஸ் நிலையம் முன்பாகக் கடை ஒன்று வாடகைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:- நா. சபாநாதன், "எஸ்கோ" சிகரெட் மொத்த விற்பனையாளர், சுன்னாகம்.
[8944)



வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

# கம்பியூட்டர் கல்வி

✶ Computer Programming in d Base III +

பயிற்சிக்காலம்: 2 மாதம்

**ஆரம்பம்: 07 - 02 - 89**
(செவ்வாய், வியாழன் வகுப்புகள்)

கட்டணம்: 1250/-
(பகுதி பகுதியாக செலுத்தலாம்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப்பயிற்சி IBM [Compatible] கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிக்கப்பட்டதொகை மாணவமாணவிகளே சேர்க்கப்படுவர். ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 06 - 02 - 89

**UNIKCO COMPUTER CENTRE**
No. 5, POWER HOUSE ROAD
2nd Lane, JAFFNA.
(Near Sub - Post Office)
(C-1392)


# அரச வங்கிகளுக்கு சமனாக வளரவேண்டும்

## கூட்டுறவுச்சங்க வங்கித் திறப்பு விழாவில் உரை

பச்சிலைப்பள்ளி, பெப்5

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அரச வங்கிகளும், கூட்டுறவு வங்கிகளுமே மக்களுக்குத் தற்போது சேவையாற்றி வருகின்றன. கிளிநொச்சிமாவட்டச் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் ஆரம்பிக்கப்படும் இந்த வங்கி தற்போது ஒருதனியார் வங்கியாக உள்ள போதிலும் காலப்போக்கில் அரச வங்கிகளுக்குச் சமமாக அதுவளரவேண்டும்.

கிளிநொச்சி மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் ஆரம்பிக்கப்பட்ட வங்கித் திறப்பு விழா வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நெதர்லாந்துப் பிரதிநிதி ஜான் புருஸ்லிமா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சிக்கனக் கடன்வழங்கு சங்க அங்கத்தவர்களின் நலனுக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த வங்கி நாளடைவில் இம் மாவட்டத்திலுள்ளபொதுமக்களின் தேவைகளுக்கும் உதவவேண்டும்.

வங்கி கொடுக்கல் வாங்கல்களுக்கு மட்டுமல்லாமல் ஒவ்வொரு கிராமத்தின் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பாடுபடவேண்டும்.

இப்படி அவர்கூறினார். இலங்கை சிக்கனகடன் வழங்கு சங்கச்சம்மேளன வடக்கு, கிழக்கு மாகாண திட்டப் பணிப்பாளர் எஸ் இராசரத்தினம் பேசுகையில், தனியார் வங்கிகள் லட்சக் கணக்கான தொகை முதலீட்டுடனே ஆரம்பித்து வைக்கப்படுகின்றன.

ஆனால் இவ்வங்கி கிளிநொச்சி மாவட்டத்தில் அறுபது சங்கங்களின் மக்கள் கூட்டுறவால் சாதிக்கக் கூடியவைகளை இந்தவங்கிநடைமுறைப் படுத்தி சங்க அங்கத்தவர்களின் உயர்ச்சிக்கு வித்திடவேண்டும்'' என்றார்.

சமாசத்தலைவர் திரு. வ சி முருகேசு தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் இலங்கை சிக்கனகடன் வழங்கு சம்மேளனமலையகத்திட்டப் பணிப்பாளர் க ரஜனி, கிளிநொச்சி மக்கள்வங்கி மாவட்ட முகாமையாளர். கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர், கிளிநொச்சி மாவட்ட உதவிக்கூட்டுறவு ஆக்க ஆணையாளர் எம் தணிகாசலம் உட்பட பலர் உரையாற்றினர்.

(இ-117)

# வெளிவாரிப் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்; நேர்முகபரீட்சை 8,9இல்

கொழும்பு, பெப் 5

வேலையற்ற வெளிவாரிப் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்காக மாவட்ட ரீதியில் எதிர்வரும் 8, 9 ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்படுறது.

அந்தந்த மாவட்ட அலுவலகங்களில் மாவட்டக் கல்விப் பணிப்பாளர்கள் நேர்முகப் பரீட்சையை நடத்துவர்.

கல்வித் தராதரப் பத்திரங்கள்மற்றும் தஸ்தாவேஜுகளுடன் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும்படி வெளிவாரிப் பட்டதாரிகள் அனைவரும் கோரப்பட்டுள்ளனர். [ஓ-எ]

# இன்று பரீட்சை

கொழும்பு, பெப் 5

இலங்கை விவேகானந்த சபையினரால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் சைவ சமயபாடப் பரீட்சைகள் நாடு முழுவதிலும்இன்று நடைபெறும்.

பரீட்சைச் செயலாளர் இத்தகவலைத் தெரிவித்தார். (உ)

# பொலிஸ் படைக்கு 3,500 பேர் விண்ணப்பம்

கொழும்பு, பெப் 5

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து இதுவரை சுமார் 3 ஆயிரத்து 500 பேர் பொலிஸ் படையில்சேர விண்ணப்பித்து உள்ளனர் என்று கடற்றொழில் தகவல் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார். (ஊ-எ)

## மக்கள் முகம்

# வைர விழாக் காணும் பண்டிதர் திரு. ஆறுமுகனார்

(தொல்புரம் கிழார் புலவர் நா.சிவபாதசுந்தரனார்)

பண்ணாம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் தொடங்கியநாளிலே (4-9-1925) மாணவராகச் சேர்ந்து அங்கு சிரேஷ்டபாடசாலைத் தராதரப்பத்திர வகுப்பு வைத்துப் படிப்பிக்க அரசினர் உத்தரவு வழங்கிய 1936 ஆம் ஆண்டிலே அவ்வகுப்பில்படித்துச் சித்தியடைந்து, அந்த வித்தியாலயத்திலேயே ஆசிரிய நியமனம்பெற்று 30 ஆண்டுகள் அங்குசேவையாற்றியவர் பண்டிதர் அ ஆறுமுகம் அவர்கள்.

வித்தியாலயக் கடமையில் அதிபர்முதல் அனைவரும் பாராட்டும் வகையில் கடமையாற்றிய பண்டிதர் தமது நண்பர்களுடனும் சேர்ந்து வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார்.

சங்கம் 1964ஆம்ஆண்டு தொடக்கம் யா. ஆதிபா சங்கப் பிரவேச, பாலபண்டித வகுப்புகளை விடுமுறை நாட்களில் நடத்தி அனேக பாலபண்டிதர், பண்டிதர்களை உருவாக்கியது. பண்டிதர் ஆறுமுகனார் வகுப்புகளுக்குப்பொறுப்பாளராயிருந்து ஊதியமின்றித் தமிழ்ப் பணி புரிந்தார்.

அவர்தம்மெய்கண்டான் சேவை 1974ஆம் ஆண்டில் முடிந்தாலும் அவர் அந்த வித்தியாலய அபிவிருத்திச்சபைச் செயலாளராயிருந்து மலையியற்கூடம், நெசவு கூடம், விஞ்ஞானகூடம் என்பவற்றை அமைப்பித்தார். ஊர் மக்களினதும் அரசினதும்உதவியைப் பெற்றுப் பாடசாலை மண்டபம் கட்டுவித்தார். மெய்கண்டான் வெள்ளி விழா 1950ஆம் ஆண்டில் விமரிசையாய் நடக்க உறுதுணையாய் இருந்தவர் [illegible] ஆவார். 1986 ஆம், [illegible] மணிவிழா நடத்த

காரணகர்த்தாவாக இருந்தவரும் அவரே. அவர் செய்த சைவப் பணிகள் பல. அவர் தம்மிடம் படித்துக் கொண்டிருந்த அசைவர்களான மாணவர் பலரைச் சமய தீட்சைபெற வைத்து திருவாசகம் முதலான நூல்களை வெகுமதியாகக் கொடுத்துச் சைவர்களாக வாழ வைத்தார். விசவத்தை முருக மூர்த்தி கோவில் பரிபாலனசபைத் தாபக உறுப்பினர்களில் ஒருவரான அவர் அச்சபையின் தலைவர், செயலாளர், முகாமையாளர் பொறுப்புக்களைப் பல்லாண்டுகள் ஏற்



றுத் திறம்பட நடத்தினார். அவர் இந்து சமய விருத்திச் சங்கத் தலைவராயிருந்து புராணபடன உரை கூறவும் சமய பாடப் போட்டிகளில் பங்குபற்றவும் பெரியவர்களையும் மாணவர்களையும் ஈடுபடுத்தினார் தாமே புராண உரை ஆசிரியராகவும் இருந்தார்.

அவர் ஆசிரியர் சங்கங்களில் செயலாளராக, நிர்வாக உறுப்பினராக இருந்து சேவை புரிந்தார். அவருக்கு 71ஆம் ஆண்டு நிறைவெய்திய [illegible] டைய மாணவர் வைர [illegible] றனர்.

# சமய நிகழ்ச்சிகளில்

## மகா சங்காபிஷேக விழா

காங்கேசன் துறை, பெப். 5

தெல்லிப்பளை கிழக்கு கவளாவத்தை அலங்கார ஞானவைரவர் சுவாமி தேவஸ்தான உற்சவம் கடந்த 22ஆம் திகதி தைப்பூச நாளன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 15 தினங்கள் உற்சவம் இடம்பெற்று இன்று 5 ஆம் திகதி மகா சங்காபிஷேக விழாவுடன் உற்சவம்பூர்த்தியடையும்.

## வீரபத்திரர் அலங்கார உற்சவம்

காங்கேசன்துறை, பெப்5

காங்கேசன்துறை குரக்கன் துறை வீரபத்திரர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 30ஆம் திகதி திங்கட்கிழமைஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர் வரும் 7ஆம் திகதி தங்கயாக சம்காரமும் மறுநாள் உற்சவ பூர்த்தி விழாவும் இடம்பெறும். (இ- 68)

# இசை வேளாளர் சங்கம் அனுதாபம்

காங்கேசன்துறை பெப் 5

'கலை உலகுக்கு அரும் பணியாற்றிய பேராசிரியர் வித்தியானந்தனின் மறைவு பேரிழப்பாகவும், பேரிடியாகவும் அமைந்து விட்டது.

இலங்கை இசை வேளாளர் சங்கச் செயலாளர் திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தி ஒன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் பாரம்பரியக் கலைகளை பேணி வளர்ப்பதிலும், அவற்றில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவிப்பதிலும் பேராசிரியர் அவர்கள் பெரும் பங்கு கொண்டு பணியாற்றினார். நாதஸ்வர - தவில் கலைகளை அருகி விடாமல் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார். நாட்டுக் கூத்து போன்ற பண்டைய கலைகளை வெளிக்கொணர்ந்து அவற்றின் பெருமைகளை நிலைநாட்டினார்.

இப்படி மேலும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-68)

# பண்டத்தரிப்பு இந்துவுக்கு முதலிடம்

பண்டத்தரிப்பு, பெப். 5

பாடசாலைத் தோட்டப்போட்டியில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு முதல் இடம் கிடைத்துள்ளது

யாழ் மாவட்ட கமநல சேவைப் பணிப்பாளர் திரு க பரமலிங்கம், விவசாயப் பணிப்பாளர் திரு என் பத்மநாதன் பயிர்ப்பாதுகாப்புக் காப்புறுதி யாழ் முகாமையாளர் திரு க சிவகுரு. யாழ் காரியாலய பெரும்பாக அலுவலர் திரு ஜி ஹென்றி ஆகியோர் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரித் தோட்டத்தை அண்மையில் பார்வையிட்டனர். (க-12)

# மணமகளின் நகைகள் கொள்ளை

முல்லைத்தீவு பெப் 5

மணமகளின் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

திருமணத்துக்காக தயார் செய்யப்பட்ட பலகாரங்களையும் கொள்ளையர்கள் சுவைத்தனர்.

இச்சம்பவம் முல்லைத்தீவு சிலாவத்தை கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த ந.சுந்தரம் என்பவர் வீட்டில் இடம் பெற்றது. [இ 92]

# 10ஆவது ஆண்டு நிறைவு

சாவகச்சேரி, பெப். 5

அறவழிப் போராட்டக்குழு பத்தாவது ஆண்டு பூர்த்தியை முன்விட்டு இம்மாதம் 25ஆம் திகதி விசேஷ நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து வருகிறது (இ-81)

# இராமநாதன் கல்லூரிக்கு உபகரணங்கள்

மாவிட்டபுரம்,பெப்5

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினரால் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான காரியாலய உபகரணங்கள் இராமநாதன் கல்லூரிக்கு வழங்கப்பட்டன.

ரோணியோ மெஷின், ஸ்பீக்கர் செற், தட்டச்சுப்பொறி போன்ற உபகரணங்கள் பாடசாலை அதிபர் திருமதி குமாரசாமியிடம் கையளிக்கப்பட்டன. (க-90)

# வெள்ளத்தால் சாய்ந்த மின்கம்பம் மீனவருக்கு யமனாக மாறியது

கல்முனை, பெப் 5

கல்முனையில் மீனவர் ஒருவர் மின்சாரம் தாக்கி மரணமானார்.

வெள்ளப்பெருக்கினால் சாய்ந்திருந்த மின்கம்பங்களின் தொய்ந்துபோன மின்கம்பிகளே இவருக்கு யமனாக மாறின.

தம்பட்டையைச் சேர்ந்த திரு: முத்துலிங்கம் கணேசலிங்கம்(வயது35) என்பவரே இறந்தவராவார்.

மின்கம்பிகள்களப்பில் தொய்ந்து கிடப்பதால் இங்குள்ள மீனவர்கள் மீன்பிடிக்கமுடியாது கஷ்டமுறுகின்றனர்.

(இ-84)

# தென்பகுதியில் நடந்த சூட்டுச் சம்பவங்கள்

கொழும்பு, பெப் 5

தென்பகுதியில் கதன்தொல ஆரம்பப் பள்ளி அதிபர் திருமதி ஐ பி. குசுமாவதி இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உயிரிழந்தவர் 5 குழந்தைகளின் தாய்.

இதேவேளை—கம்பளை, ஜெயமலபுர என்னுமிடத்தில் முன்னாள் விமானப்படை ஊழியர் ஜி. எல். பியசேன என்பவர் இனந் தெரியாதோரால் ஞாயிறு இரவு சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ ★ ★

பிற்றிகல என்னுமிடத்தில் வீதி அருகே இனந் தெரியாத ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

சடலத்தில் துப்பாக்கிச் சூடு காணப்பட்டது ஆனால் சடலம் அரை வாசி எரிந்த நிலையில் காணப்பட்டது.

★ ★ ★

திருமண வைபவம் ஒன்றுக்குச் சென்றிருந்த யு. என். பி. ஆதரவாளர்கள் இரண்டு பேர் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மீகஹா தென்னையில் கடந்த ஞாயிறு இச் சம்பவம் இடம்பெற்றது.

(ஒ-எ)

# அரிவாள் வெட்டு

நெடுந்தீவு மேற்கு கோட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த திரு எஸ். பசுபதி (52 வயது) என்பவர் அரிவாள் வெட்டுக்கு இலக்காகி யாழ் [illegible] சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். (இ-111)


# FORTUNA ENTERPRISES

[Labour Licence No 79]

Immediate Vacancies in Kuwait

**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

(1) Airport and Hospital Cleaners-250
விமானநிலைய, ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர்
சம்பளம்: 30 KD
(மேலதிகநேரவேலை திடப்படுத்தப்பட்டுள்ளது)
அத்துடன் இருப்பிட வசதி
20-02-89க்கு முன் 7 போட்டோக்களுடனும் பாஸ்போர்ட்டுடனும் விண்ணப்பித்தால் 30-03-89க்கு முன் பிரயாணமாகலாம்.

(2) Heavy Vehicle Drivers -50
கனரக வாகன சாரதிகள்
சம்பளம்: 60 KD

(3) Light Vehicle Drivers 50
சாதாரண வாகன சாரதிகள்
சம்பளம்: 45 KD

நாடவேண்டிய முகவரி:
யாழ்ப்பாணப் பிரதிநிதி

**இ. விஸ்வேஸ்வராயன்**
3ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.
[C-1435]


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
09- 04- 1955

இறப்பு:-
5- 2- 1987



திரு. சந்தியாப்பிள்ளை ஜேம்ஸ்ராசா
(ரஞ்சு)
[மெக்கானிக்)

ஆவி பிரிந்து ஆண்டிரண்டு சென்றாலும்
எம் - ஆயுள் உள்ளவரை நாம்
உம்மை மறவோம்.
உமது ஆன்மா சாந்தியடைய
என்றும் இறைவனை பிரார்த்திக்கும்:
தாய், தந்தை, சகோதரர், சகோதரிகள்
மைத்துனர், மைத்துனிகள், பெறுமக்கள்,
மருமக்கள், உற்றார், உறவினர்.
(8932)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பெருகும் கல்விப் பிரச்சினைகள்

# கல்வி நிலை சீராகி, உயராமல் இருக்க காரணிகளும், பின்புலங்களும் என்ன?

## பரிகாரம் காண்பது சமூகத்தின் கடமை

எமது சமுதாயத்தில் கட்டுப்பாடும் நல் நடத்தையும்நாளாந்தம் குன்றிவரும் ஒரு கால கட்டத்தில் நாம் இன்று வசித்துவருகிறோம் கிராமப்புற மாணவர் மத்தியில் கூட அமைதியின்மையும் ஒழுங்கீனமும் பெருகிவரும் செய்திகள் பத்திரிகைகளில் வெளிவருகின்றன.

கல்விக் கூடங்கள் "கலாட்டா" மேடைகளாக மாறுவதைக் காண்கின்றோம். பாடசாலைகள் மூடப்பட்டு மாணவர்கள் தாம் திரும்பித் தேடமுடியாத காலத்தை இழந்து கதியற்று நிற்பதைக் காண்கிறோம்.

இந்நிலைமைபெற்றோர் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விமான்கள், சமூக சேவையாளர் ஆகியோர் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தி மாணவர்களை நல்வழிப்படுத்தும் வழிகளைத் தேடத் தூண்டியுள்ளது.

இதற்கான பரிகாரங்களைத் தேடுவது ஒரு நீண்ட கஷ்டமான டயிற்சி என்ற போதும் இது முக்கியமானதும் தேவையானதும் கட்டாயமானதும் ஆகும்.

மாணவர்கள் மத்தியில் இன்று காணப்படும் அமைதியின்மைக்கும், ஒழுக்கக்கேடுகளுக்கும் உடனடிக் காரணங்களை எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாக இருப்பினும் இதன் அடிப்படைக் காரணங்களை நாம் ஆராய்ந்து அறிவது பயனுடையதாகும்.

### நேர்மையற்ற வாழ்க்கை முறை

எமது சமுதாயத்தில் வியாபித்திருக்கும் வியாபாரப் போக்கு, நேர்மையின்மை, ஊழல், நீதியின்மை, கபடமான வாழ்கை முறை ஆகியவை மாணவர் உள்ளங்களில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

தமது பெற்றோர் ஆசிரியர்கள் மற்றும் வழிகாட்டிகள் பேச்சில் ஒன்றும் செயலில் இன்னொன்றுமாக நடந்து கொள்வது அவர்களுக்கு வியப்பையும், வெறுப்பையும் ஏற்படுத்துகிறது. மேடைகளில் அரசியல்வாதிகளும் அரங்குகளில் சமய சமூக சீர்திருத்த வாதிகளும் எடுத்து இயம்பும் நீதி நியாய போதனைகளை அவர்களது தனிப்பட்ட வாழ்க்கை முறையில் காண முடியாமல் போவதை அவர்கள் நன்கு அவதானிக்கின்றனர்.

ஆகவே மாணவர்களின் கட்டுப்பாடின்மைக்கும் விரக்தியால் ஏற்படும் திசைதடுமாறிய போக்குகளுக்கும் ஏற்ற நாற்று மேடைகளை எம் பெரியவர்களே தயாரித்துவிடுகின்றனர்,

ஒரு சுயநலமுள்ள, வியாபாரப் போக்குடைய கடவுள் சிந்தனை குறைந்த, பொருளாசை மிகுந்த ஒரு சமுதாயத்தில் பணத்திற்கே மதிப்புக் கொடுக்கப்படுகிறது. கடவுள் நம்பிக்கை நலிவுறுகிறது. இவ்விதமான இறை விசுவாசம் குறைந்த ஒரு சூழ்நிலையில் வாழும் ஒரு மாணவன் கட்டுபாடற்றவனாக இருப்பது ஆச்சரியமன்று.

### கட்டுப்படுத்தப்பட்ட பாட விதானம்

இன்று பாடசாலைகளின் பாட விதானங்களை கல்வி இலாகா கட்டுப்படுத்தி உள்ளது. இவ்வாறு கட்டுப்படுத்தப்பட்ட கல்வித் திட்டத்தில் மாணவர்களைச் சுயமாகச் சிந்திக்க வைக்கவும் சமூக உணர்ச்சியை ஊட்டவும், சுயமுயர்ச்சியில் ஆர்வத்தை ஏற்படுத்தவும் அவகாசங்கள் மிகக் குறைவாகவே உள. பாடசாலைகளில் கல்வி இலாகாவால் தமது பெற்றோர் ஆசிரிடத்தப்படும் போட்டிப் பரீட்சைகள் பாட விதானங்களை கட்டுப்படுத்துவதுடன் பகுத்தாராய்வுத்திறனையும் மழுங்கடிக்கின்றன.

இன்றுள்ள பாடவிதானத்தில் காணப்படும் இன்னுமொரு குறைபாடு பாடங்களுக்கு வகுக்கப்பட்ட கற்பித்தல் நேரத்தில் காணப்படும் நேர ஒதுக்கீடாகும் உதாரணமாக சமய பாடத்துக்கு ஒரு வாரத்தில் இரு நாட்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த இரு பாடவேளையும் மாணவர்களுக்கு சமயம் கற்பித்தலுக்கு போதுமானதல்ல என மதத் தலைவர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். முழுமையான சமய அறிவைப் பெற முடியாத மாணவர்கள் மத்தியில் இறை நம்பிக்கை, பாவச் செயல்களுக்குப் பயப்படும் தன்மை குரு, பெற்றோர்களைக் கனம் பண்ணும் பண்பு ஆகிய நற்பண்புகள் அருகி வருவதைக் காணக் கூடியதாகவிருக்கின்றன.

சிறு பாடசாலைகளில் 'நூலகம்'' உடற்பயிற்சி போன்ற பாடங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் பாடவேளை மாணவர்களுக்குப் பயன்தரக் கூடிய வழிகளில் பயன்படுத்தப்படுவதில்லை என்று குறை கூறப்படுகிறது. கிராமப் பாடசாலைகளில் நூலக விளையாட்டு மைதான வசதிகள் குறைவாக அல்லது முற்றிலும் இல்லாத நிலையில் காணப்படுகின்றது. இதனால் இப்பாடவேளையை மாணவர்களும் ஆசிரியர்களும் "ஓய்வு'' பாடவேளையாகவே கருதுகின்றனர். இப்பாடவேளைகளில் மாணவர்கள் தமது வகுப்பறைகளில் கட்டுப்பாடு அற்ற வகையில் நழுவித் தமக்குள் சண்டையிடும் சந்தர்ப்பங்களும் பல உண்டு.

### கல்வியில் ஏற்றத்தாழ்வு

எம்மை அடுத்தடுத்து ஆட்சி செய்த அரசாங்கங்கள் கல்வியில் எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் வழங்கப்படும் எனக் கூறிவந்த போதிலும், கல்வி வசதி விடயத்தில் ஏற்ற தாழ்வுகளைக் காணக்கூடியதாக இருக்கிறது. நம் நாட்டிலுள்ள சுமார் 35 லட்சம் மாணவர்களில் 25 லட்சம் மாணவர்கள் வறிய, வசதியற்ற பாடசாலைகளிலேயே கல்வி கற்கின்றனர். இங்கே ஏழை பணக்காரர் பாடசாலை என்ற பாகுபாட்டைக் காண்கிறோம். பாடசாலைகளுக்கு, கல்வித் திணைக்களம் வழங்கும் பாடசாலை உபகரணங்கள், விஞ்ஞான, மனையியல், விளையாட்டுப் பாடங்களுக்கான உபகரண வசதிகள் ஆகியவற்றை விநியோக்கும் முறைகளிலும் பாகுபாடுகளைக் காணக் கூடியதாகவிருக்கிறது.

## கதிரோன்

எனவே பணக்காரப் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகள் பணக்காரப் பிள்ளைகளுக்கான பாடசாலைகளாகவும் வறிய பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகள் வறிய பிள்ளைகளுக்கான பாடசாலைகளாகவும் இருந்து வருவதைக் காணமுடிகிறது.

இன்றைய கல்விமுறையும் பல்கலைக் கழகத்துக்கு மாணவர்கள் தெரிவு செய்யும் முறையும் மாணவர்கள் மத்தியில் நிச்சயமற்ற தன்மையையும், விரக்தியையும் மனத்தாக்கங்களையும் ஏற்படுத்தி உள்ளன. பல்கலைக்கழகங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் அனுமதி, மேற்கல்வி பயில்வதற்குச் சந்தர்ப்பமின்மை, தொழில் பெற முடியாத விரக்தி நிலை ஆகியன மாணவர்களைப் பலாத்கார வழிகளில் இட்டுச் செல்கின்றன.

### ஆசிரியர் பொறுப்பு

மாணவர்கள் மத்தியில் பெருகி வரும் ஒழுக்கமின்மைக்கு ஆசிரியர்களும் பொறுப்பு எனக் கூறப்படுகிறது. தரம் குறைந்தவர்கள் ஆசிரியர்களாகச் சேர்க்கப்பட்டமையும் மாணவர்களின் ஒழுக்கமற்ற நடவடிக்கைகளுக்கு உதவியாக இருந்து வருவது மறுக்கமுடியாத உண்மையாகும்.

எதிர்காலத் தலைவர்களை உருவாக்கும் ஓர் ஆசிரியன், ஒரு பிள்ளையின் எதிர்காலத்தை வளமாக்கவும் முடியும். அவனைப் படுகுழியில் தள்ளிவிடவும் முடியும். இன்று ஆசிரியத்தொண்டு ஒரு வெறும் தொழிலாகிவிட்டது. இதனால் சேவை மனப்பான்மை உடைய ஆசிரியர்களின் பரம்பரை அருகிவருகிறது திறமையற்ற, ஆசிரியத் தொழிலுக்கு சிறிதுமே தகுதியற்றவர்கள் ஆசிரியர்கள்பதவிகளைப்[பெற்றதனால்] மாணவர்களை நல்வழியில்வளம் படுத்த அவர்களால் முடிவதில்லை.

பெற்றோர்தமதுபிள்ளைகளுக்கு வேண்டிய வழிகாட்டல்களைச் செய்து அவர்களின் அன்பையும் விசுவாசத்தையும் பெறுதவிடத்து அப்பிள்ளைகள் வழிதவறி நடக்கவே செய்வர்.

பாடசாலைகளில் மாணவர்கள் கட்டுப்பாட்டை மீறுவதற்கும் கூடாத நடத்தைகளில் இறங்குவதற்கும் அப்பாடசாலையின் அதிபர் ஆசிரியர்கள் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள். மாணவமுதல்வர்கள் தனித்தும் ஒருமித்தும் பொறுப்புடையவராவர்.

மாணவர்கள் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் உணர்ச்சி ரீதியாகவும் ஒரு ஆசிரியரின் கண்காணிப்பிலும் வழிகாட்டலிலும் வளர்க்கப்பட வேண்டும் ஆகவே எக்காரணம் கொண்டும் மாணவர்களை ஆசிரியர்கள் தமது சுய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படுத்தக் கூடாது. இதேபோல் அரசியல் வாதிகளும் நிருவாக அதிகாரங்களைக் கொண்ட கல்வி அதிகாரங்களும் தம்மை மேன்மைப்படுத்த மாணவர்களைப் பகடைக் காய்களாகப் பாவிப்பது தவிர்க்கப்பட வேண்டும்

இளைஞர் மத்தியில் நம்பிக்கை, நேர்மை, விசுவாசம் ஆகியவற்றை மலரச் செய்ய எமது தலைவர்கள் முதியோர்கள் மத்தியிலும் இப்பண்புகள் மலர வேண்டும். ஆசை வார்த்தைகள் அடைய முடியாத இலக்குகள் உணர்ச்சி ஊட்டும் கோஷங்கள் மூலம் இளைஞர்கள் கவர முயற்சிப்பது எப்பொழுதும் ஆபத்தையே தரும். போதனைகளைச் சாதனைகளாகச் செய்து காட்டும்ஆசிரியர்கள், தலைவர்கள், அரசியல்வாதிகள், ஆகியோர் எப்பொழுதும் சமூகத்தால் மதிக்கப்படுவர் இளைஞர்களால் கவரப்படுவார்கள் தலைவர்கள் எனப் போற்றப்படுவார்கள். இவர்கள் மீது இளைஞர்கள் வைத்த நம்பிக்கை, பற்று ஏமாற்றப்படும் போது பூதாகரமான அளவில் கிளர்ச்சிகள் வெடித்துச் சிதறுவதைக் காணக்கூடியதாகவிருக்கிறது.

### ஆசிரிய ஆலோசகர்

இவைகளுக்குப் பரிகாரம் தேடும் வகையில் ஒவ்வொரு பாடசாலையிலும் ஆசிரிய ஆலோசகர்(Teacher Counsellor) நியமிக்கப்பட வேண்டும் இவர் வகுப்பாசிரியர்களின் உதவியுடன் மாணவர்களுடைய குடும்ப சமூக பொருளாதாரப் பின்னணிகளை அறிந்து அவைக்கேற்ற வகையில் மாணவர்களுக்கு கல்வி பாடத் தெரிவு, தொழில் தெரிவு, தொழில்வாய்ப்பு போன்ற விடயங்களில் வழிகாட்டியாக இருக்க வேண்டும். அத்துடன் மாணவர்கள் தமது பொழுதைப் பயனுள்ள வழிகளில் செலவழிக்கவும் அவர்கள் சமூகத்துக்குத் தொண்டனாகவும் வழிகாட்டியாகவும் மிளிரவும் ஆசிரிய ஆலோசகர்களின் சேவை இன்றி அமையாததாகும்.

★

## வாசகர் திருமுகம்

### வடக்கு கிழக்கிற்கு பிராந்தியஒலிபரப்புநிலையம்வேண்டும்

நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனியாக ஒலிபரப்பு நிலையங்கள் அமைக்கப் பட வேண்டும். இவை ரஜரட்டை, ருகுணு, மஹநுவர பிராந்திய ஒலிபரப்பு நிலையங்கள் போன்று செயல்படலாம்: எமது மகாணச் செய்திகளை விவரமாக மக்கள் அறிந்து கொள்ள இது உதவும்.

தற்போது வடக்கில் அதிகமாக இந்திய வானொலியின் செய்திகளை கேட்கும் நிலை ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பில் ஆல் இந்தியா வானொலியின் நிருபர்கள் உள்ளதோடு யாழ்ப்பாணம். வவனியாவில் 'தூரதர்ஷன்' அஞ்சல் நிலையங்களும் கடந்த ஒருவருடமாக செயல்பட்டு வருவது தெரிந்ததே.

எனவே தொடர்ந்தும் இந்திய வெகுஜன தொடர்பு சாதனங்களை நாம் நம்பிக்கொண்டிராது நமது பகுதிக்கென பிராந்திய ஒலிபரப்பு நிலையங்களை நிறுவுவதே சாலச் சிறந்ததாகும். இதற்கான உடனடி நடவடிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுப்பது அவசியமாகும்.

எ. ஜெ. எம். ஹிஷ்மி
இல. 16 ஆஸாத் வீதி,
யாழ்ப்பாணம்.

### தவருன இடப் பெயர் மாற்றங்கள்

இடப் பெயர்களை அதிகாரமற்றமுறையில்மாற்றுதல் பற்றி யாழ் பல்கலைக் கழக புவியியற்றுறை பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் 1989-1-6ஆம் தேதிய ''உதயன்'' தின ஏட்டில் விடுத்துள்ள அறிக்கையும் அதை முன்வைத்து ''உதயன்''ஆசிரியர் 1989-1-9 ஆம் தேதிய தின ஏட்டில் வரைந்துள்ள ஆசிரியர் தலையங்கமும் உரிய காலத்தில் வழங்கப்பட்ட சிறந்த அறிவுரையாகவும் எச்சரிக்கையாகவும் அமைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் பரவலாக அரசால் அங்கீகரிக்கப்பட்டு பதிவான மரபுவழிப் பெயர்கள் ஆங்காங்கு திரிபு செய்யப்பட்டோ அன்றி முழுமையாக மாற்றம் செய்யப்பட்டோ புழக்கத்தில் இருந்து வருவது சகசமாயுள்ளது. வாய் மொழி மூலமன்றி எழுத்தில் பதிக்கும் போதும் இத்தவருன முறை கையாளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதொன்ருகும்.

புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தானம் மிகப் பழமை வாய்ந்த திருக்கோயில்களுள் ஒன்ருகும். அதன் பெயர் இவ்வாறு தமிழ்ப் பஞ்சாங்கம், சைவநெறி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது போன்று முன்னர் புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலை என்று அழைக்கப்பட்டு தற்போது அதன் தாபகராகிய பெரியார் வேலாயுதம் அவர்களின் திருநாமத்தில் இயங்கிவரும் மகாவித்தியாலயம், பசுபதீஸ்வரர் தேவஸ்தானம் போன்ற புலோலி கிழக்குப் பிரிவில் அமைந்திருந்த போதிலும் இந் நிறுவனங்களை செய்தித் தாழ்கள் பொது மக்கள் குறிப்பிடும் போது சில சந்தர்ப்பங்களில் பருத்தித்துறை என்ற பெயருடன் இணைத்து வழங்கி வருகிறுர்கள், இது தவறு.

இவ்வகையான தவருன சொற்பிரயோகங்கள் அனந்தம். இவைகளை உடனடியாக தடுத்து நிறுத்தி உரிய பெயர்களை மீண்டும் புளக்கத்துக்குள்ளாக்க உதயன் ஆசிரியர் அவர்கள் குறிப்பிட்ட பிரகாரம் பெயர் மாற்றங்களை கண்காணிக்க மாவட்ட ரீதியில் சரித்திர பூகோள நிபுணர்கள் குழு அமைத்தல் அவசியம்.

புலோலி வே. ஆறுமுகம்

## தமிழ்நாட்டில் பிறந்த அதிசயக் குழந்தை!

தமிழ்நாடு — மதுரை மாவட்டம்,போடி நாயக்கனூரில் உள்ள ஆலிம் மருத்துவ மனையில் அதிசயமான ஆண்குழந்தை ஒன்று (கடந்த டிசம்பர் மாத இறுதியில்) பிறந்துள்ளது.

குழந்தையைப் பிரசவித்த தாயின் பெயர் லட்சுமி (வயது 25) தகப்பன் திரு. கங்காதரன் (வயது 38). தாய்க்கு மூன்ருவது பிரசவம்.

இந்த அதிசயக் குழந்தையின் மலக்குடல், மலத் துவாரத்துடன் முடிவடையாமல் நீண்டு சுரங்கப்பாதை வைத்து, ஆண் அவயவத்தில் (விதையில்) (Scrotum) முடிவடைந்துள்ளதுடன். அம்முடிவிலிருந்து மலமும் வெளியாகிக் கொண்டிருந்தது.

இலட்சத்தில் ஒன்ருகப் பிறக்கும் இத்தகைய குழந்தைகளுக்கு சிறுநீர் மலம் கலந்ததாக வெளியேறுவது உண்டு. ஆனால் இக் குழந்தைக்கு சிறுநீர் மலம் கலக்காமல் வெளியானது.

அதிசயப் பிறவியான இக்குழந்தை பிறந்து ஒருவாரம் கழித்து ஆலிம் மருத்துவ மனையில் டாக்டர் ஜனுப் எம், சகாப்தீன் டாக்டர் திருமதி கே. அமுநா, டாக்டர் ஜனுப் முசாநிக் ஆகிய மூவரும் இணைந்து சிறந்த முறையில் சத்திர சிகிச்சை மேற்கொண்டனர்.

இவர்களில் டாக்டர் ஜனுப் சகாப்தீன் கடந்தசில மாதங்களுக்கு முன்னர் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் அம்பாறை மாவட்டத்திற்கு வாகை தந்து இலவச வைத்திய சேவை புரிந்தவர்,

இச்சத்திர சிகிச்சையின் பின்னர் குழந்தைக்கு மலத் துவாரத்தின் மூலமே மலம் வெளியாகக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

குழந்தை தற்பொழுது நலமாகவே உள்ளதென அறிவிக்கப்படுகின்றது. (க-14)

ஜப்பானிய பாரம்பரியங்களை மீறி

## சாதாரண மங்கையை மணம்முடித்த புதிய சக்கரவர்த்தி அஹிஹிற்ரோ

ஜப்பானின் முடிக்குரிய இளவரசராக 1952 இல் பிரகடனப்படுத்தப்பட்ட அஹிஹிற்ரோ (வயது 55) இன்று அந்த நாட்டின் 125 ஆவது சக்கரவர்த்தியாகப் பதவி ஏற்றுள்ளார். அரச குடும்பத்துக்குரிய பாரம்பரியங்கள் சிலவற்றை இவர் சாவதானமாகவும் துணிவாகவும் மீறி உள்ளதால் இவர் ஜப்பானில் சர்ச்சைக்குரிய இளவரசராகக் கருதப் பட்டார்.

இவர் அதிர்ச்சியைக் கொடுத்த பாரம்பரிய மீறல் இவரின் திருமணமாகும். அவர்சாதாரண பெண் ஒருத்தியைத் திருமணஞ் செய்தார்.

ஜப்பானிய சக்கரவர்த்தயின் அரண்மனையில் சகல ஐசுவரியங்களுடனும் வளர்க்கப்பட்ட இவர் இவரின் வாலிபப் பருவத்திலே அரண்மனையை விட்டு எவருக்கும் தெரியாது வெளியேறி ''ஜின்ஸா,'' கோப்பிக் கடையில் தனது நண்பர்களுடன் கோப்பி பருகும் பழக்கமுடையவராயிருந்தார்.

இவருக்கு 23 வயதாய் இருந்த போது 22 வயதுடைய மிச்சிக்கோ ஷோடா என்றபெண்ணை முதன்முதல் டென்னிஸ் பந்தாட்ட மைதானத்தில் சந்தித்தார் இளவரசர்உடனே அவர் மீது காதலானூர். அவருடன் அடிக்கடிதொலைபேசியில் தொடர்பு கொண்டார். காதல்க் கடிதங்கள் எழுதி தன்னைத் திருமணஞ் செய்யும்படி வேண்டினூர்.

இளவரசியாகப் போகும் தங்களுடைய மகளுக்குப் பாதுகாப்புப் பிரச்சனைஏற்படுமோ என இவரின் பெற்ருேர். முதலில் தயங்கினர் பின்னர் திருமணத்துக்கு ... ஜப்பானிய பிரபுத்துவ குடும்பங்கள் வன்மையாக எதிர்த்தன. இத்திருமணம் ''இந்நாற்ருண்டின் காதல் காவியம்'' என வர்ணிக்கப்பட்டது.

### வழமைக்கு முரணுன வாழ்க்கை முறை

இவர் இலங்கை உட்பட பல நாடுகளைத் தரிசித்து உள்ளார். அந்நிய நாட்டுப் பொருள்களில் இவருக்கும் இவரது மனைவிக்கும், அலாதிவிருப்பம்.

இவரது வாழ்க்கை முறை அரசபரம்பரை வழமைக்குமுரணுனதாக இருந்தது. தனது நண்பர்களை அழைத்து அரண்மனையில் ... உரையாடினூர். டென்னிஸ் விளையாட்டிலும் குதிரைச் சவாரியிலும் ஆசை கொண்ட இவர் சாதரண மக்களுடன் சேர்ந்து விளையாடினூர்.

இவரது மனைவியும் இவரைப் பின்பற்றி சில பாரம்பரிய முறைகளுக்கு முழுக்குப் போட்டார். ஜப்பானில் பிரபுத்துவ குடும்பப் பெண்கள் அடுப்படிக்குப் போவதே இடையாது: ஆயினும் இவர் தமக்கென ஒரு அடுப்படியை ஒழுங்கு செய்வித்து அங்கேயே தமக்கு விரும்பிய உணவு வகைகளைச் சமையல் செய்தார்.

### புதிய மாற்றங்கள் எதிர்பார்ப்பு

சக்கரவர்த்தி அஹிஹிற்ரோ ஜப்பானிய அரசபரம்பரை முறையில் சில புதிய மாற்றங்களை ஏற்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவரை சம்பளம் பெறும் முதலாவது சக்கரவர்த்தி'' என ஓர் எழுத்தாளர் விவரித்துள்ளார்.

சக்கரவர்த்தி ஹிரோ ஹிற்ரோவின் மறைவின் பின் சூரியனின் வழித்தோன்றல் எனக் கூறப்படும் ஜப்பானிய ஏகாதிபத்திய பரம்பரை பழைய வடிவம் உடையதாக இருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது,

பழைய பாரம்பரியங்களைப் பின்பற்றும் ஜப்பானியரின் நோக்கில் புதிய சக்கரவர்த்தி அஹிஹிற்ரோ அந்நிய செல்வாக்கினுல் மெழுகப்பட்ட ஒருவர்'' என வர்ணிக்கப்பட்டுள்ளார். இவர் இளமைக் காலந் தொட்டே அமெரிக்கப் பெண் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் வளர்க்கப்பட்டார் எனவேஜப்பானியசக்கரவர்த்தி அமைப்புமுறையில் பல மாற்றங்களை இவர் ஏற்படுத்தினுல் அது வியப்பாகாது.

ஒரு காலத்தில் சூரிய புத்திரர்கள் எனக் கூறப்பட்ட ஜப்பானியச் சக்கரவர்த்திகள் நவீன ஆசியாவின் தலைவர்களாக மேற்கத்தைய நாடுகளுக்கும் சவால் விட்டனர். இருந்தும் அவர்கள் எவரையும் எக்காலத்திலும் அரசாள முடியவில்லை.

சுமார் 1500 ஆண்டு காலசரித்திரத்தை உடைய இவர்களின் ஏகாதிபத்திய குடும்பம் உண்மையான அதிகாரங்களை ஒரு காலத்திலும் வைத்திருக்கவில்லை வருங்காலத்தில் ''இருசாந்திமம்'' சிம்மாசனம் அசைக்கப்படலாம்.

ஆனுல் அது அழிக்கப் படமாட்டாது.

(சேனு. கானு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலுதவிப் பயிற்சி
வகுப்புகள் ஆரம்பம்

**D. G. M. COURSE**

(மருத்துவ வகுப்பு)

தொடர்பு கொள்ள வேண்டிய நேரம்
காலை 9.00 மணி முதல் 12.00 வரை

வெளிநாட்டு வேலை வாய்ப்பு உண்டு.

டாக்டர்:
லினஸ் கட்டிட மேல்மாடி
சென்: பற்றிக்ஸ் கல்லூரி முன்பாக
யாழ்ப்பாணம்.

[C/1433]


## 90ஆம் நாள் நினைவஞ்சலி



### கதிரிப்பிள்ளை ஸ்ரீநந்தகுமாரன்

(சுக்ளா)

அன்னை மடியில்: 02-06-1968 — ஆண்டவன் மடியில்: 08-11-1988

தாரகை நடுவே தண்மதிபோல
தரணியில் உதித்த தமிழ்மறவா !
செம்பரியோவான் கல்லூரியிலே சீர்பெறவே
\- கல்வி பயின்று
செந்தமிழ் பேசி ஈழமண்ணை சிவக்கவைத்த
\- செந்தமிழ்ச் சுடரே !
புன்னகை பூத்த ஒளிவிளக்கே !
புதுயுகம் படைக்கப் புறப்பட்டாய்
தீப ஒளியேற்றும் திருநாளடா தீபாவளியாம்
தீபஒளியேற்றவே விடுவந்து சேர்வதற்குள்
பெரும் காலன் வசப்பட்ட செய்தியடா
நமக்கு இங்கு கிடைத்ததடா !
அன்னை இங்கு காத்திருக்க - உன்
பொன் உடல் சாய்ந்ததடா
புழுதிமண்ரோட்டினிலே
சிறுப்பிட்டி மண்ணில் உதித்த பெருமையோடு
பிறந்த மண்ணிலேயே உயிர்த்தியாகம்
செய்தாயடா
உன் புகழ் அழியாதடா
உன் பிரிவால் வாடிநிற்கும் உயிர்களுக்கு
என்ன பதில் ?

எமது அன்புச் செல்வத்தின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி செலுத்திக் கொள்வதுடன் 5-02-1989 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறும் வீட்டுக்கிரியையில் கலந்துகொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சிறுப்பிட்டி தெற்கு.
நீர்வேலி
(9457)

குடும்பத்தினரும்
உறவினர்களும்,
நண்பர்களும்.

## கிளிநொச்சியில்
# வன்செயலால் பாதிப்புற்ற குடும்பங்களுக்குநிவாரணம்

வட்டக்கச்சி, பெப் 5

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த கால வன்செயல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகள் இவ்வாரம் கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளை மூலம் வழங்கப்படவுள்ளன.

முதல்கட்டமாக பின்வரும் கிராமங்களிலுள்ள சிலகுடும்பங்களுக்கு இந்த நிவாரணங்கள் வழங்கப்படும்.

திருவையாறு, வட்டக்கச்சி, கண்டாவளை, ஸ்கந்தபுரம், பரந்தன், உருத்திரபுரம், கணேசபுரம், சிவநகர், கிளிநொச்சிநகர், கனகபுரம், பாரதிபுரம் கரிமபுரம், வன்னேரிக்குளம், ஊரியான், திருநகர், அக்கராயன்குளம், இராமனுகபுரம்.

விண்ணப்ப பரிசீலனை வேலைகள் முடிந்தவுடன் மீதம் உள்ள குடும்பங்களுக்கும் நிவாரணப் பணத்தை வழங்கவிருப்பதாக மேலதிக அரசாங்க அதிபர் திரு க. துரைராசா தெரிவித்தார்.

(க - 163)

## கடை எரிந்தது

கோப்பாய் பெப் .5

உரும்பராய் வைரவர் கோயிலுக்குச் சமீபமாக வுள்ள கடை ஒன்று எரிந்து சாம்பராகியது.

உரும்பராய்ச்சந்திக்குச் சமீபமாகவுள்ள அமைதிப்படையினரின் சென்றி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதை அடுத்தே ! இச் சம்பவம் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டது.

(ஓ - 72)

## நிவாரணக் கொடுப்பனவு

சாவகச்சேரி, பெப் 5

சாவகச்சேரி நகர கி. சே. பிரிவில் 616 குடும்பங்களும், நுணாவில் கிழக்கில் 398 குடும்பங்களும் சாவகச்சேரி கிழக்கில் 368 குடும்பங்களும் வரணி வடக்கில் 117 குடும்பங்களும், கைதடி நுணாவிலில் 436 குடும்பங்களும், நுணாவில் மேற்கில் 207 குடும்பங்களும், மட்டுவில் தெற்கில் 326 குடும்பங்களும், அல்லாரையில் 234 குடும்பங்களும், சரசாலையில் 129 குடும்பங்களும், மட்டுவில் வடக்கில் 76 குடும்பங்களும், மிசாலை வடக்கில் 170 குடும்பங்களும் உசனில் 122 குடும்பங்களும், சாவகச்சேரி வடக்கில் 259 குடும்பங்களும், எழுதுமட்டுவாளில் 129 குடும்பங்களும் தலா ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொண்டன.

கொடுப்பனவுகள் தொடரும் என அறிவிப்புகள் தெரிவிக்கின்றன.

(க)

## பிரதேசசபை அலுவலகத்தின் பொறுப்பதிகாரி

ஊர்காவற்றுறை, பெப் 5

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் நாரந்தனை உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரியாக திருமதி பு. சிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றுவோரில் இவர் ஒருவரே பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

[க-16]


# பிரயாண ஒழுங்குகள்

சிங்கப்பூர் கப்பலில்
வேலை வாய்ப்பு

MESS BOY, DECK BOY — 400 S. Dollar
OILER, A. B. — 450 Dollar

C. D C தேவைப்படும். வயது 22 — 35

அரபு நாடுகளுக்கு: வீட்டுப் பணிபெண்களும். றைவர்மாரும் (Cupals) 10,000/-

அபுதாபி: கிளீனேர்ஸ் — 500 D. H M
Depature - 1 Month with Food and Lodging.
கனரக வாகன சாரதிமார் - U A. E Licence Drivers சம்பளம் - 8900/-

டுபாய்: பலதரப்பட்ட வேலைகளும்

கனடா, ஜேர்மனிக்கும் விரைவில்
அனுப்பி வைக்கப்படும்.

பாஸ்போட், சகல வேலைகளும் செய்து
கொடுக்கப்படும்.

அரபு நாடுகளுக்கு கூலியாட்கள் தேவை

சதீசன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்
மல்லாகம் சந்தி, மல்லாகம்.
(8946)


# காணவில்லை



### ம, திருச்செல்வம்

ம. திருச்செல்வம் என்னும் பெயருடைய 12 வருடங்கள் மதிக்கக்கூடிய சிறுவன் ஒருவனை (01- 02- 1989 காலை 8 மணி முதல்) காணவில்லை. உயரம் சுமார் 3½ அடி. நிறம் சிவப்பு கடைசியாகக் காணப்பட்ட உடுப்பு: சிவப்புக் கோடன் சாரமும், சேட்டும் அணிந்திருந்தார்.

இவரை அடையாளம் தெரிந்தவர்கள் கீழ்க் காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். விபரம் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்

த. இராசையா,
சின்ன அம்மன் கோயிலடி,
களவாவோடை,
ஏழாலை.
(8942)




# பேசும் கம்பியூட்டர்
## இலங்கையில் முதற்தடவையாக

கணக்கியல், எழுத்துக்கூட்டுதல், வாசிப்பு, இசைத்துறை, மற்றும் பலதுறைகளில் உங்களுக்குள்ள திறமையை வளர்ச்சியடையச் செய்கின்றது. உங்கள் பிள்ளைக்கு இது ஒரு உன்னத வெகுமதி.

ஒரு ஆசிரியரைப்போல் உங்களுக்கு வழிகாட்டுகிறது. உங்களைப் பயிற்றுவிக்கிறது. பிழைதிருத்தம் செய்கிறது. இவையெல்லாவற்றையும இனிமையான கம்பியூட்டர் குரலில் வழங்குகிறது.

19 செயல்முறைகள் மற்றும் அறிவூட்டும் விளையாட்டுகளுடன் பயிலுவதைக் குதூகலமாக்குகின்றது.

- சொற்களைப் பயிலலும் எழுத்துக் கூட்டுதலும்
- எழுத்துக்கூட்டுதல் புதிர்
- சொல்லுதல்
- விடுபட்டுள்ள எழுத்து
- முதல் எழுத்துக்கூட்டலுடன் ஆரம்பம்
- ஹெங்மேன்
- இருவர் ஆடும் ஹெங்மேன்
- ஒழுக்கமுறை-குழம்பிவரும் சொற்கள்
- இருவர் ஆடும் ஒழுக்கமுறை
- கூட்டல் – 3 திறன் மட்டம்
- கழித்தல்-3 திறன் மட்டம்
- பெருக்கல் 3 திறன் மட்டம்
- பிரித்தல்-3 திறன் மட்டம்
- கணக்கியல் புதிர் - 3 திறன் மட்டம்
- கழிவு-தருக்கமுறை விளையாட்டு

இவை மட்டுமல்ல-இது ஒரு ரோபோ இசை வல்லுனனும்கூட சங்கீத மனப்பாடமும் செய்து அதை மீண்டும் இசைக்கிறது


- இசையில் பின்பற்றல்
- மெட்டு நினைவாற்றல்
- இசைப் பாடம்

6 மாத உத்தரவாதம்

**அறிமுக விலை.ரூ.2850/-**

பெப்ரவா 12ம் திகதி வரை மட்டுமே

மாதந் தோறும்
தவணைப்
பணமாக
ரூ 135 செலுத்த
வேண்டும்




—இலங்கையில் ஒரேஒரு முகவர்—

**டெக் (ஸ்ரீலங்கா)**

நாராஎவறன் பிற்ற லேட் நாவல தொலைபேசி 565970



# மக்கள் வங்கி
## அடைவு நகைகள் மீளளித்தல்

1. யாழ்ப்பாணம் கன்னாதிட்டி, சங்கானை கிளைகளில் அடைவு வைத்து 19 - 8 - 88 க்கு முன்னர் பணம் செலுத்தியவர்களின் நகைகள் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக்கிளை மூலமாக எதிர்வரும் 7, 8 9, 14, 16-ஆம் திகதிகளாகிய 5 தினங்களில் வழங்கப்படும்.
2. யாழ்ப்பாணம் பிரதான வீதி, புங்குடுதீவு கிளைகளில் அடைவு வைத்து 19 – 8 – 88 க்கு முன்னர் பணம் செலுத்தியவர்களின் நகைகள் யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கிளை மூலமாக எதிர்வரும் 7, 8, 9, 16, 21, 22-ஆம் திகதிகளாகிய 6 தினங் ளில் வழங்கப்படும்.

குறிப்பு:

1. மேற்கூறிய சகலருக்கும் தனித்தனிக் கடிதம் மூலம் நகை வழங்கப்படும் திகதி அறிவிக்கப்பட்டிருக்கிறது.
2. நகைகளைப் பெறும் திகதிகளில் காலை 9 00 மணிக்கு
   - அ. தமது அடையாள அட்டை,
   - ஆ. பணம் கட்டிய ரசீது,
   - இ. வங்கியால் அனுப்பப்பட்ட கடிதம் ஆகியவற்றுடன் மேற் குறிப்பிட்ட நகைகளை வழங்கும் கிளைக்குச் சமுகமளிக்கவேண்டும்.
3. உரிய திகதிகளில் நகைகளை மீளப் பெறுமிடத்து அவை திரும்பவும் பாதுகாப்புக் காரணங்களுக்காக கொழும்புக்கு அனுப்பப்படும். அதனை மீளப் பெறுவதற்கு பலத்த சிரமம் ஏற்படலாம் என்பதை மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

க. சுப்பிரமணியம்,
பிரதேச முகாமையாளர் (வ பி.).

(C/1430)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொய்யாமொழி**

குறள்:
நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது

பொருள்:
எப்போதும் கோபம் உள்ளவனாகவும் (சொல்லிலும் செயலிலும்) அளவு கடந்த பதற்றமுள்ளவனாகவும் இருக்கிறவன் எப்போதும் எந்த இடத்திலும் யாருக்கும் தோற்றுப்போகக்கூடிய பலவீனமுள்ளவன்.

உதயன்

இல. 192/1 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
05. 2. 1989 8 பெ. இல 23

# மீண்டும் வேண்டாம்!

யாழ்ப்பாண நகரத்தில், கல்வி நிலையங்களைப் பொறுத்தமட்டில், கடந்த சில நாட்கள் கவலை நாட்களாக அமைந்துவிட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில், பாடசாலை நேரத்தில் ஆசிரியர் ஒருவர் துப்பாக்கி வேட்டுக்கு இரையானார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்கள். மற்றும் பல மாணவர்கள் காயமடைந்தார்கள்.

இந்த இரண்டு சம்பவங்களுக்குமான காரண காரியங்களை ஆராய்வதோ அல்லது அவற்றை எடைபோட்டு விமர்சிப்பதோ இப்பத்தியின் நோக்கமல்ல.

பல்கலைக்கழகச் சம்பவங்கள் தொடர்பாக பொறுப்பான தலைவேந்தர் அறிக்கை ஒன்றைத் தயாரித்து அரச மேலிடங்களுக்கு அனுப்பி உள்ளார்.

கல்விப் பகுதியும் அவ்வாறே செய்திருக்கும் என எதிர்பார்க்கிறோம்.

அந்த அறிக்கைகளைத் தொடர்ந்து அரசு உயர் மட்ட விசாரணைகளுக்கு வகை செய்யவும் கூடும்.

ஆனால் சாதாரண தமிழ்ப் பிரசை ஒருவன் இந்தச் சம்பவங்களால் அடைந்த வேதனையை, அவன் மனதில் எழுந்த அச்சங்களை, கண்டன உணர்வை எதனாலும், எவராலும் தடுக்கவோ, மறைக்கவோ முடியாது என்பது யதார்த்தம்.

இப்பத்தியில் நாம் அடிக்கடி வலியுறுத்தி வருவது போல, இடித்துரைத்து வருவது போல, கல்விதான் தமிழ்மக்களின் அரிய சொத்து; அழியாத செல்வம்.

எந்த இடர்களின் மத்தியிலும், நெருக்கடிகளின் இறுக்கத்திலும் அந்த நிலை தொடர வேண்டும்; அழிந்துவிடக்கூடாது; சரிந்து தானும் போகக்கூடாது என்பதே தமிழ்ப் பிரசை ஒவ்வொருவரின் விருப்பமுமாகும்.

கல்வி போதனை பாதிக்கப்படாமல் இருக்க கல்விச்சாலைகளிலும் மாணவர் மனங்களிலும் அமைதியும், நிம்மதியும் இரு கண்கள் போன்றவை. அறிவை சரிவரப் பார்க்க— கிரகிக்க— அவை இரண்டும் அத்தியாவசியம்.

கல்வி நிலையங்களையும் மாணவர்களையும் சூழ அமைதி இல்லையேல் கல்வியை எமது சொத்தாகப் பேணுவது என்பது வெறும் வார்த்தைகளின் வேடிக்கையாகிவிடும்.

எனவே இது விடயத்தில் கல்வி நிர்வாகம், பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய முக்கிய துறைகளைச் சார்ந்தவர்கள் மிகப் பொறுப்புடன் நடந்து கொள்ளுதல் பிரதானம்.

மொத்தத்தில் நடந்துபோன துரதிர்ஷ்டமான, வேதனைதரும் சம்பவங்கள் போன்று, இனியும் நடக்காமல் பார்த்துக் கொள்வது பொறுப்புவாய்ந்த சகல தரப்பாரினதும் தலையாய கடமையாகும். துரதிர்ஷ்டம் மீளாமல் இருக்கப் பார்த்துக் கொள்ள நிறைவான, தூய்மையான, களங்கமில்லாத, நோக்கும், சேவையும் தேவை.

# பரகுவேயில் ஜனநாயகம்; புதிய ஜனாதிபதி அறிவிப்பு

அஸுன்சியன் பெப் 4

பாரகுவேயின் புதிய ஜனாதிபதியாக ஜெனரல இன்று ரொட்ரிக்கஸ் பதவி ஏற்றார்.

புரட்சியில் பதவி இழந்த ஜனாதிபதி ஜெனரல் ஸ்ட்ரேஸ்னருக்கு சிலி அரசியல் தஞ்சமளித்தது.

ஜனாதிபதியாக பதவி ஏற்ற ஜெனரல் ரொட்ரிக்கஸ் சொன்னதாவது;

மனித உரிமைகள் பேணப்படும். ஜனநாயக சுதந்திரங்கள் மக்களுக்கு வழங்கப்படும்.

35 ஆண்டுகளாக, 'பொலீஸ் ராஜ்யமாக' முன்னாள் அதிபர் ஸ்ட்ரோஸ்னர் நாட்டை நடத்தி வந்தார். இராணுவ அடக்கு முறைக்கு நான் இடமளிக்கமாட்டேன்.

ஆளும் கொலராடோ கட்சியில் உள்ள பிளவு களைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பேன்— இப்படி புதிய ஜனாதிபதி சொன்னார்.

நேற்று முன்தினம் நடந்த இராணுவப் புரட்சியில் சுமார் 300 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 30 பேர் சிவிலியன்கள். ஏனையோர் பதவி இழந்த ஜனாதிபதியின் விசுவாசப் படையினர்.

35 ஆண்டு கால சர்வாதிகார ஆட்சி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து, மக்கள் வீதிகளில் ஆரவாரஞ் செய்தனர்.

புதியஜனாதிபதி தனது உறுதி மொழிகளை நிறைவேற்றுவாரா என்பது பற்றி உன்னிப்பாகக் கவனித்து வருவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

# எல்சல்வடோரில் அமெரிக்க உபஜனாதிபதி

சான்சல்வடோர், பெப் 4

அமெரிக்க உபஜனாதிபதி டொன்குவில எல்சல்வடோருக்கு விஜயம் செய்தார்.

அங்கு மேற்கொள்ளப்படவுள்ள ஜனநாயக சீர்திருத்த நடவடிக்கைகள் பற்றி அரசுத்தலைவருடன் ஆராய்ந்தார்.

மனித உரிமை மீறல் தொடருமானால் எல்சல்வடோருடனான அமெரிக்க உறவு பாதிப்படையலாம் என்று உபஜனாதிபதி எச்சரித்தார். (எ)

# ஆப்கனில் இருந்து சோவியத் வீரர்கள் பூரண வாபஸ்!

காபூல், பெப் 4

ஆப்கனில் இருந்து சோவியத் துருப்புக்கள் விலக்கப்படுவது இறுதிக் கட்டத்திற்கு வந்துவிட்டது.

9 ஆண்டுகளுக்கு முன்னர் நுழைந்த ஒன்றரை லட்சம் சோவியத் துருப்புக்களில் ஆக 2 ஆயிரமே காபூல் விமான நிலையத்தைச் சுற்றி முகாமிட்டுள்ளன.

கடைசிக் கட்டமாக ஏராளமான துருப்புக்கள் கவசவண்டிகள், கனரக ஆயுதங்கள் சகிதம் சலோன் நெடுஞ்சாலையூடாக சோவியத்தை நோக்கி கடந்த வெள்ளிக்கிழமை பயணத்தை ஆரம்பித்தது.

அந்த நெடுஞ்சாலைப் பகுதியில் கடும் பனி பெய்து கொண்டிருந்தது.

காபூல் நகரில் முன்னர் 25 ஆயிரம் சோவியத் துருப்புக்கள் முகாமிட்டிருந்தன. நேற்றில் இருந்து சுமார் 2 ஆயிரம் சோவியத் துருப்புக்களே காபூலில் விமான நிலையத்தைச் சுற்றி நிலை கொண்டு உள்ளன.

விமான நிலையத்தில் சோவியத் ஹெலிகொப்டர்கள், துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட

## காபூல் விமான நிலையத்தில் உள்ள 2 ஆயிரம் வீரரைத்தவிர

நிலையில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

ஜெனிவா ஒப்பந்தத்தில் விதிக்கப்பட்ட காலக் கெடுவான பெப்ரவரி 15க்கு முன்னரே சோவியத் துருப்புக்கள் அனைத்தும் விலக்கப்பட்டு விடலாம் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதே வேளை—

பாகிஸ்தானில் இரண்டு நாள் பேச்சுக்களை முடித்துக் கொண்டு ஈரான் வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் வேலாயதி தெஹ்ரான் திரும்பினார். பாகிஸ்தானில் இருந்து செயற்படும் கெரில்லாக் குழுக்களின் தலைவர் முஜாஹிட்டியும் அவருடன் தெஹ்ரான் திரும்பினார்.

தெஹ்ரானில் இருந்து இயங்கும் கெரில்லாக் குழுக்களுடன் இடைக்கால அரசு ஒன்றை அமைப்பது குறித்து இணக்கம் ஒன்றைக் காண்பதே இந்த விஜயத்தின் நோக்கம் என்று தெரிய வருகின்றது.

இதனிடையில்—

சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவர்னாட்ஸே இஸ்லாமாபாத்துக்கு இன்று விஜயம் செய்தார்.

இதன் மத்தியில் —

சோவியத் துருப்புக்கள் முற்றாக வெளியேறிய பின்னரும் எனது அரசு பதவியில் நீடிக்கும்.

இப்படி ஆப்கன் அதிபர் டாக்டர் நஜிபுல்லா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அதிரடிப் புரட்சிகளினாலோ அல்லது கிளர்ச்சிக்காரர்களினாலோ எனது அரசைக் கவிழ்த்துவிட முடியாது-

கடந்த சில வாரங்களாக நடைபெற்று வந்த சோவியத் - கெரில்லாச் சண்டையில் சுமார் 7 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்; 12 ஆயிரம் பேர் காயமடைந்தனர்-

இப்படி நஜீபுல்லா சொன்னார். (எ)

# இந்துமா கடல் பற்றி இந்திய அரசு கரிசனை!

சென்னை, பெப். 4

அடுத்த நூற்றாண்டு கடல்களின் நூற்றாண்டு ஆக இருக்கக்கூடும் ஆதலால் இந்துமா கடல் பற்றி விழிப்பான கண்காணிப்பு அவசியம்.

இப்படி இந்தியக்கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தளபதி அட்மிரல் சோப்ரா தெரிவித்தார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் நேற்று இந்திய கடல் ஆய்வுக் கழகத்தின் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது.

அப்போது அட்மிரல் சோப்ரா முக்கிய உரை ஒன்றை நிகழ்த்தினார்.

அப்போது அவர், 'இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டிராவிட்டால் இந்தப் பிராந்தியத்துக்கு அப்பாற்பட்ட ஒரு வல்லரசுக்கு இந்தப் பிராந்தியத்தில் தலையிட நப் வெளிப்படையான அழைப்புக் கொடுத்ததாக இருந்திருக்கும் — என்று அவர் குறிப்பிட்டார். (எ)

# 'கொன்ரு'வுடன் பேச்சு நடத்த நிக்கரகுவா அதிபர் மறுப்பு!

கரகாஸ் பெப்.4

நிக்கரகுவா அதிபர் டானியல் ஒற்றேகா, வெனிசூலா நாட்டின் அதிபருடன் பேச்சுக்களை நடத்திய பின்னர் செய்தியாளர் மாநாடு ஒன்றில் பேசினார்.

அப்போது அவர் சொன்னதாவது;

ஹொண்டுரூஸில் முகாம் அமைத்து இயங்கும் கொன்ரு கிளர்ச்சியாளருக்கு பொது மன்னிப்பு வழங்க எனது அரசு தீர்மானித்துள்ளது.

பொது மன்னிப்பை அவர்கள் ஏற்றாலும் சரி ஏற்காவிட்டாலும் சரி ஹொண்டுரூஸ் அரசு கொன்ருக் கிளர்ச்சிக்காரர்களை திருப்பி அனுப்பி வைக்கவேண்டும்.

கொன்ருக் கிளர்ச்சியாளருடன் எனது அரசு பேச்சுவார்த்தைகளை இனி நடத்தாது.

கொன்ருக் கிளர்ச்சியாளர்கள் தோற்கடிக்கப்பட்டுவிட்டார்கள்.

செத்த பிணத்துடன் பேச்சுக்களை நடத்துவதா? அது நடக்காது.

இப்படி ஜெனரல் ஒற்றேகா தெரிவித்தார். [எ]

# மனித உரிமை குழுக்கூட்டம்

ஜெனிவா, பெப் 4

ஆக்கிரமிப்புச்செய்யப்பட்ட அரபுப் பிரதேசங்களில் இஸ்ரவேல் நடத்தும் மனித உரிமை மீறல் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் நேற்று கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

பலஸ்தீனியரை கைது செய்து சித்திரவதை செய்வது சுட்டுக்கொல்வது — ஆகிய மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக பலஸ்தீன விடுதலை இயக்கப்பிரதிநிதி குற்றஞ்சாட்டினார்.

இஸ்ரவேல் பிரதிநிதி அதனை மறுத்தார். (எ)

# சோவியத் தலைவருக்கு சீனாவின் அழைப்பு

பீஜிங், பெப். 4

உச்சி மாநாடு நடத்த வரும்படி சோவியத் ஜனாதிபதி மிக்கெயில் கோர்பச்சேவுக்கு சீனா நேற்று முறையான அழைப்பு விடுத்தது.

அழைப்புக் கடிதம்த்தை சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வார்ட் ஷெவர்னாட்ஸேயிடம் கையளிக்கப்பட்டது.

திரு கோர்பச்சேவ் சார்பில் அழைப்பை திரு ஷெவர்னாட்ஸே ஏற்றுக்கொண்டார்.

ஏப்ரல் மாதத்தில் திரு கோர்பச்சேவ் சீனா செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# பிரெஞ்சு விருது

கல்கத்தா, பெப் 4

பிரபல வங்காள திரைப்பட மேதை சத்யஜித்ரேக்கு பிரெஞ்சு நாட்டின் அதி உயர் விருது வழங்கப்பட்டது.

இந்த விருதை பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரண்ட் கல்கத்தா வந்து அவருக்கு வழங்கிக் கௌரவித்தார். (எ)

# அன்டார்டிக்காவுக்கு ஆபத்து எனத் தகவல்

பாரிஸ், பெப். 4

அன்டார்டிக்கா பிரதேசத்தில் உள்ள விலங்கினங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க சூழல் பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இரண்டரை லட்சம் கலன் டீஸல் எண்ணையுடன் ஆர்ஜென்ரீனக் கப்பல் ஒன்று அன்டார்டிக்காவில் உள்ள பிஸ்மார்க் நீரிணையில் மூழ்கியதைத் தொடர்ந்தே இந்த ஆபத்து ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

அடுத்த நூறு வருடங்களுக்கு பாதிப்பு இருக்கும் என்றும் கூறப்படுகின்றது. (எ)

# கலைஞரின் வெற்றிக் கடிதம்!

# என்னில் நீ இருக்கிறாய்! உன்னில் நான் இருக்கிறேன்!!

குற்றாலத்துத் தேனருவியெனக் கொட்டிக் கொண்டிருக்கிறாய் அன்பை - பாசத்தை - அதன் காரணமாக எழும் வாழ்த்துக்களை.

இன்று நேற்றல்ல, ஐம்பது ஆண்டு காலமாக என் இதயத்தில் ரணம் ஏற்படும் பொழுதெல்லாம் உன் பார்வையே எனக்கு மாமருந்து! நீ பொழியும் அன்பேஎன்னை வாழவைக்கும் அமுதம்!

பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இதே ஜனவரித் திங்களின் இறுதி நாள் மாலையில் கோட்டையை விட்டு வெளி

> தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய பின்னர் தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி தனது தொண்டர்களுக்கு எழுதிய கடிதம் அவரது கழகப் பத்திரிகை 'முரசொலியில்' வெளியிடப்பட்டது. அது இங்கு பிரசுரமாகிறது.

யேறச் சொல்லி கொக்கரித்தது புதுடில்லி எதேச்சாதிகாரம்!

பள்ளிவிழா ஒன்றுக்குச் சென்று வீட்டுக்குள் நுழைகின்றேன்.

ஆட்சி கலைக்கப்பட்டது என்று செய்தியை வீட்டார் சிரித்துக் கொண்டே சொன்னார்கள்.

அப்படியோ எனக் கேட்டவாறு - அரசின் கார்களை வாயிலில் இருந்தவாறே தலைமைச் செயலகத்திற்கு அனுப்பி விட்டு மாடிக்குச் சென்றேன்.

தொலைபேசியை எடுத்தேன் விவரமறிய — அதன் தொடர்பை அரசு துண்டித்து விட்டிருந்தது.

சில வினாடிகளுக்கு எல்லாம் பொலீஸ் அதிகாரிகள் வீட்டுக்குள் சோதனையிட்டனர். என்ன வேண்டும் என்றும் கேட்டேன் மாறனும் ஸ்டாலினும் என்றார்கள். வெளியே சென்ற அவர்கள் திரும்பி வந்தவுடன் பொலீஸுக்கு அனுப்பிவைத்தேன்.

பத்திரிகை அலுவலகத்தில் எழுதிக் கொண்டிருந்த போது அதிகாரிகள் மலர் ஆர்ப்பாட்டமாக நுழைந்தனர்.

நிமிர்ந்து பார்த்தேன் அலுவலகம் சோதனை [illegible] நடத்துங்கள் என்லக் கூறி[illegible] கொண்டிருந்தேன்.

ஆம்! ஆட்சி ஏன் கலைக்கப்பட்டது என்பது குறித்து அன்று எழுதிக் கொண்டிருந்தேன்.

இப்போது தமிழர்கள் சமூகத்தின் கரத்தில்



கருணாநிதி

ஆட்சியை ஒப்படைத்துள்ளவர் - இந்தநேரம் அலுவலகத்தில் இருந்து இந்தக் கடிதம் எழுதுகிறேன் உனக்கு!

**தியாகத் தழும்பு**

தியாகத் தழும்புகளைத் தழுவிக் கொண்டு நீயும் நானும் அகமகிழ்கிறோம்!

அடக்கு முறையால் ஏற்பட்ட வடுக்களை வருடிக் கொடுத்திட [illegible] புரித்துப் போகிறோம்.

என் மீது அரும்பு படவும்பொறுத்துக்கொள்ள முடியாமல் துடிக்கும் தாயைப் போல் உன் போன்ற உடன்பிறப்புக்கள் என்னைச் சுற்றிலும் நிறைந்திருப்பதால் - முகிலைக்கிழித்து வெளிக்கிளம்பிய கதிரொளி என இந்த வெற்றி கண்டு பெருவெள்ளத்தில் மிதக்கிறீர்கள். புரிகிறது எனக்கு!

**அமுதம் கூட நஞ்சாகும்**

13 ஆண்டுகள் அத்தனை வேதனை! அவ்வளவு சோதனை! அனைத்தையும் பொறுத்துக் கொண்டு அண்ணா வழியில் முன்னேறியவர்கள் அல்லவா! அதனால் மகிழ்ச்சி எல்லை மீறுவது இயற்கை அல்லவா!

எனினும் அமுதங் கூட அளவுக்கு மீறினால் நஞ்சாகும் என்பரே!

அடக்கம்!, அமைதி!, ஆர்ப்பாட்டம் இன்றி மகிழ்ச்சிஉணர்வு வெளிப்படுதல்!

**குழந்தை**

தகதக காயமாகத் தங்க நிறக் குழந்தை! அழகே வடிவு! அற்புதத் தோற்றம்! குழந்தை என்பதால் அதிகம் குலுக்காமல் கொஞ்சிடுவது தானே முறை குழந்தையின் நலத்தைக் காக்கும் பாதுகாப்பு.

அதே குழந்தைதான் நீயும் நானும் பெற்றிருக்கும் இந்த வெற்றி என்பதை மறந்திடாதே.

தமிழ் மக்கள் எந்தப் பணிக்காகப் பெரும் பொறுப்பை நமது தலையில் ஏற்றி வைத்திருக்கிறார்களோ, அந்தப் பணியினை ஆற்றிட எமக்கு வழிவிடு! அந்தப் பணியின் வெற்றிக்கு உன் தூய்மையான ஒத்துழைப்பைத் தந்திடு.

**பார்வையே வாழ்த்து**

என்னில் நீ இருக்கிறாய்! உன்னில் நான் இருக்கிறேன்.

என்னை நீ வாழ்த்தவில்லை. உன்னையே நீ வாழ்த்திக் கொள்கிறாய்!

இருவரும் இணைந்து நம் தாயை ஆம், நமது தமிழ்க்குலத்தை வாழ வைப்போம்! வா!

மணியே என் மாமணியே! பணியாற்ற விடு! உன் பாசம் அறிவேன் நான்! என்றும் என் இதயத்தில் உன்னை வைத்துக் கொண்டு உன் இதயத்தில் குடிபுகுந்திருக்கும் எனக்கு எதற்காக வாழ்த்து?

உன் பார்வையே எனக்கு வாழ்த்து! என் பணிக்கு ஊக்கம்—

இவ்வாறு கலைஞர் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (எ)

**தெரிந்த நாடு தெரியாத விவரம்**

# பரகுவே

தென் அமெரிக்காவில் உள்ள சின்னஞ் சிறிய நாடு பரகுவே. ஒரு லட்சத்து 57 ஆயிரத்து 047 சதுர மைல் விஸ்தீரணம் கொண்டது.

1986ஆம்ஆண்டு கணக்கெடுப்பின்படி சனத்தொகை 33 லட்சத்து 81 ஆயிரம் ஆகும்.

பரகுவே, குடியரசு அரசமைப்புக் கொண்டது. நாடாளுமன்றம் இரண்டு சபைகளைக் கொண்டது.

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஆட்சி நிலவுகிறது.

தலைநகரம்: அஸுன்சியன். உத்தியோக மொழி: ஸ்பானிஷ் உத்தியோக மதம்: ரோமன் கத்தோலிக்கம் கரன்ஸி: பரகுயன் குயாரணி. 320 குயாரணிகள் அமெரிக்க டாலர் ஒன்றுக்குச் சமம்.

இனவிகிதாசாரம்: 90.8 சதவிகிதம் மெஸ்ரிஸோ (Mestizos) அமெரிந்தியன் (Amerindians) 3 சதவிகிதம், ஜேர்மனியர்- 1.7 சதவிகிதம். ஏனையோர் - 4.5 சதவிகிதம்.

ஆயுதப் படையினரின் எண்ணிக்கை: 14.370 இராணுவம் - 77.9%. கடற்படை 15.3%. விமானப்படை - 6.8%.

பரகுவே நாட்டைச் சுற்றி ஆர்ஜென்ரீனா, பொலிவியா, பிரேஸில் ஆகிய நாடுகள் உள்ளன.

பிறப்பு விகிதம் 38.9 சதவிகிதமாக உள்ளது. (உலகின் சராசரி பிறப்பு விகிதம்: 29% இறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 7.7 சதவிகிதம் (உலகின் சராசரி 11%), ஆண்களின் சராசரி வயது 62.8 ஆண்டுகள். பெண்களின் சராசரி வயது 67.5 ஆண்டுகள்.

நாட்டின் 51.5 வீதம் காடுகள். மேய்ச்சல் தரை - 39.1% விவசாயம் மற்றும் நிரந்தரப் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்ட நிலம் - 4.9%

ஏற்றுமதிப் பொருள்கள்: சோயா அவரை. புகையிலை, பதனிடப்பட்ட மாட்டுத்தோல், பதனிடப்பட்ட இறைச்சி, பருத்தி நார்.

இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் வருமாறு: எரிபொருள், போக்குவரத்துத் தளபாடங்கள், இயந்திரங்கள், இரும்பு முதலியன.

ஐந்து தினசரிகள் தலைநகரில் இருந்து வெளியாகின்றன. அவற்றின் மொத்த விற்பனை சுமார் 2லட்சம் பிரதிகள். 5 பேருக்கு ஒருவர் வானொலிப் பெட்டி வைத்திருக்கின்றனர்; 12 பேருக்கு ஒருவர் டெலிவிஷன் வைத்திருக்கின்றனர். 39 பேருக்கு ஒருவர் டெலிபோன் வைத்திருக்கின்றனர்.

மாணவர்களில் 47.4 சதவீதமானோர் ஆரம்பக்கல்வி பெறுகின்றனர். உயர்கல்வி பெறுபவர்கள் 2.9 சதவீதமானோரே.

15 வயதுக்கு மேற்பட்டோரில் 85 சதவீதமானோர் படிப்பு வாசனையுள்ளவர்கள். அவர்களில் 88சதவீதமானோர் ஆண்களும், பெண்கள் 82.9 சதவீதமானோரும் உள்ளனர்.

1,379 பேருக்கு ஒரு டாக்டர் வீதம் பணி ஆற்றுகின்றனர். 907 நோயாளருக்கு ஒரு படுக்கை வீதம் ஆஸ்பத்திரி வசதிகள் உண்டு. குழந்தைகள் இறப்பு வீதம் ஆயிரத்துக்கு 52.9 ஆகும். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
★ பட்டுப் பிடவைகள்
★ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, : யாழ்ப்பாணம்.

# உதயன்

05 02 1989 ஞாயிற்றுக்கிழமை

சேட்டிங் சூட்டிங்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை :-; யாழ்ப்பாணம்.

## 14 ஆயிரம் பேர் விண்ணப்பம்

கொழும்பு பெப் 5
38 ஆயிரம் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிகளுக்கு இதுவரை சுமார் 14 ஆயிரம் பேரே விண்ணப்பித்துள்ளனர்.

உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்:

விண்ணப்பித்தவர்களில் பெரும்பாலோர் கண்டி மற்றும் குருநாகல் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று அவர் மேலும் சொன்னார். (உ-எ)

## மலிவு விலையில்

### உங்கள் பயணங்களை மேற்கொள்ளலாம்.

★ மலிவு விலையில் இன்றே உங்கள் விமான டிக்கட்டுக்களை பதிவுசெய்து கொள்ளுங்கள். விசா, வெளி நாட்டுச் செலாவணி யாவும் செய்து தரப்படும்.

★ கனடா, ஜேர்மன், சிங்கப்பூர், மலேசியா, பாங்கொக், இந்தியா மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஷேட விமானக் கட்டணங்கள் உண்டு.

நேரடியாகவோ அன்றி தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

**Unitrades Travels & Tours Limited**

First Floor, Hidramani Building,
63 1/8, Chatham Street,
COLOMBO - 1.
Telephone: 26826/34409

(C/1426)

## மரண அறிவித்தல்

### திரு. E. V. இராமநாதன்

மல்லாகம் இளைப்பாறிய கல்வியதிகாரி திரு. E. V. இராமநாதன் அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் காலம்சென்ற திருமதி பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சேதுநாதன் (ஆசிரியர், மல்லாகம் மகாவித்தியாலயம்) திருச்செந்திநாதன் (ஜேர்மனி), ஸ்ரீ அருன்நாதன் (நோர்வே), பாலமீரா (நோர்வே) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலம் சென்ற நீலகண்டன் (மலேஷியா) காலம்சென்ற திருமதி அன்னபூரணி அம்மாள் (மலேஷியா) காலம்சென்ற வைரவநாதன், முத்துக்குமாரசாமி (சாமி) திருமதி சரஸ்வதி சுந்தர்மடம்) திருமதி விமலாதேவி (கோப்பாய்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகாதேவன் (அதிபர், மல்லாகம் மகா வித்தியாலயம்), சகாதேவன் ஆகியோரின் மைத்துனரும், திருமதி மந்தாகினி, திருமதி றேஸ்மலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், திருக்கலியுகன்,' துர்க்கா ஜனனி ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 6-2 89 அன்று கன்னுகம் பத்மவாசா (திருஞானசம்பந்த வித்தியாசாலைக்கு முன்பாக) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9-30 மணிஅளவில் மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(9468)

## கோர்பச்சேவ் சீனவுக்கு மே மாதத்தில் செல்வார்

பீகிங், பெப் 5
சோவியத் ஜனதிபதி மிக்செய்ல் கோர்பச்சேவ் எதிர்வரும் மே மாதம் நடுப்பகுதியில் சீனவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்வார்.

சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெர்வான்ட்ஸே இதனை தெரிவித்தார்.

சீனப் பெருந்தலைவர் டெங் - ஷியா - பெங்கைச் சந்தித்த பின்னர் சோவியத் அமைச்சர் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர்.

மிகப் பெரிய கம்யூனிஸ்ட் நாடுகளான சீனவும் சோவியத் யூனியனும் 1959 ஆம் ஆண்டளவில் தங்கள் ராஜதந்திர உறவுகளை முறித்துக் கொண்டன. சித்தாந்த ரீதியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளே இதற்குக் காரணம்

அதன் பின்னர் கடந்த 30 ஆண்டுகளாக இரண்டு நாடுகளின் தலைவர்கள் சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ எ)

## புத்தக பார்சல் உங்களுடையதா?

வேலணை பெப் 5
கடந்த வெள்ளிக் கிழமை மாலை தீவுப்பகுதி மினிபஸ்ஸில் 260 ரூபா பெறுமதியான புத்தகங்கள் அடங்கிய பார்சல் ஒன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது. இப்புத்தக பார்சலுக்குரியவர் தகுந்த ஆதாரத்தைக் காட்டி வேலணை கிழக்கு கிராம சேவை அலுவலர் திரு. கே. கணேசலிங்கத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-167)

## ஆஸ்பத்திரியில் கத்திக்குத்து

கொழும்பு, பெப் 5
நாகொட அரச மருத்துவ மனையில் நோயாளியாகவிருந்த சகா ஒருவருக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த இரண்டு அதிரடிப் பொலீஸ் படைவீரர்கள் இனந்தெரியாதோரின் கத்திக்குத்துக்கானார்கள்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமைகாலை இடம் பெற்றது.

காயமடைந்த அதிரடிப்படை வீரர்கள் வைத்திருந்த இரண்டு எம்.ரி -5 ரக துப்பாக்கிகளையும் அந்த நபர்கள் பறித்துக் கொண்டு ஓடிவிட்டனராம். (உ-எ)

### ஆளுநராக...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
அமைச்சர் பதவியை இழக்கக் காரணமாய் இருந்தது.

வடமேற்கு மாகாண ஆளுநராக இது காலவரை முன்னாள் அமைச்சர் டி. பி. விஜதுங்க பணியாற்றி வந்தார்.

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அவர் அண்மையில் ஆளுநர் பதவியை ராஜினமாச் செய்திருந்தார். (ஒ-எ)

### சுதந்திர ..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
வந்துள்ளன.

ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பற்றி யதார்த்த பூர்வமாக நாம் ஆராய வேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நவீன சமாதானக் கொள்கை ஒன்றைக் கடைப்பிடிப்பது அவசியம்.

மனித சுதந்திரத்தை, சட்டங்களினால் மட்டும் உறுதிப்படுத்த முடியாது. மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்குரிய சமாதான சூழ்நிலையை நாம் சட்டிஎழுப்ப வேண்டும். சமுதாயம் முன்னேற பேதங்கள் காட்டப்படக்கூடாது.

எந்த ஒரு சமூகத்திற்கும் அநீதி இழைக்காத வகையில் சமூக மேம்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறவேண்டும். — இப்படி அவர் தெரிவித்தார். (உ-எ)

### அக்கராயன்..

முழுவதும் இப்பகுதியில் சூட்டுச் சத்தங்கள் தொடர்ந்து கேட்டதாகவும் -

அதன்பின்னர் தொடர்ந்து அபபகுதியில் இடையிடையே மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது (உ-163)

### புதுக்குடியிருப்பு.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வைக்கப்பட்டிருந்தது.

பூதவுடலை புதுக்குடியிருப்புக்குக் கொண்டு செல்வதற்கு அமைதிப் படையினர் அனுமதி வழங்கியிருந்தனர். (ஒ 5)

### ஸ்ரீலங்கா....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
''பூசை''யும் செய்யப் பட்டதாம் தண்டனைக்கு ஆளாகியவர்களைத் தேடிச் சென்ற அவர்களது மனைவிமார்களைக் கொண்டும் உறவினர்களைக் கொண்டும் வீதிகள் துப்புரவு செய்விக்கப்பட்டன!( ஒ-167)

### தெற்கில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பட்டதும் தெரிந்ததே.

இம்மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி அவசரகால நிலை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி ஆயுதப் படையினரை பழைய இடங்களுக்குத் திருப்பி அனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டது. (அ-எ)

### முட்டைக்குள் முட்டை!

கொழும்பு, பெப். 5
முட்டைக்குள்ளே ஒரு முட்டை!

இந்த அதிசய முட்டை, சிராவஸ்திபுர என்னுமிடத்தில் கடை ஒன்றில் விற்கப்பட்டது.

பாடசாலை மாணவி நிமாலி சமரசேகரா கடைக்குச் சென்று முட்டை ஒன்றை வாங்கினர்.

வீட்டுக்குக்கொண்டு வந்து அந்த முட்டையை அவித்தார். பின்னர் உடைத்த போது கோதுடன் இன்னொரு முட்டை உள்ளே இருந்தது. (எ)

## ரூ. 1 1/2 லட்சம் அபகரிப்பு

கொழும்பு. பெப் 5
பம்பலப்பிட்டியில் உள்ள சுனேவியூ ஹோட்டலுக்குள் நுழைந்த இரண்டு ஆயுதம் தரித்தவர்கள் காசாக வைத்திருந்த சுமார் 1½ லட்சம் ரூபாவை அபகரித்துச் சென்றனர். (இ-எ)

### செம்பியன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
றப்பட்டது.

திருமணப் பதிவு வைபவம் ஒன்றுக்கு இரவில் சோடனை வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போதே இச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. (ஒ-10)

## மத்திய கிழக்கு டிராப்டுகளை உள்ளூர் வங்கியிலேயே மாற்றலாம்

கொழும்பு, பெப் 5
மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து அங்கு தொழில் புரிவோர் இலங்கையில் உள்ள தமது உறவினர்களுக்கு மக்கள் வங்கியின் பெயரில் அனுப்பும் ட்ராப்டுகளை வெளியூரில் வசிப்பவர்கள் கொழும்புக்கு வந்து மாற்றத் தேவை இல்லை.

இனிமேல் அவற்றை உள்ளூர் மக்கள் வங்கிக் கிளைகளிலேயே மாற்றிப் பணம் பெற்றுக்கொள்ளலாம் என்று மக்கள் வங்கித் தலைவர் லக்ஷ்மன் வட்டவல தெரிவித்தார். (ஒ-எ)

### சட்ட விதிகளுக்கு.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
லிருந்து 15 மீற்றர் தூரத்திற்கு அப்பாலும் —

'பி' பிரிவு வீதியிலிருந்து 12 மீற்றர் தூரத்திற்கு அப்பாலும் -

'சி'பிரிவு வீதியிலிருந்து 7 5 மீற்றர் தூரத்திற்கு அப்பாலுமே அமைக்கப் படவேண்டும்.

யாழ் மாவட்டத்தில் இந்த விதிமுறைகளைக் கவனிக்காமல் ஆங்காங்கே முக்கிய வீதிகளுக்கு அருகே நிரந்தரமான கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன,

இதனால் வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன வீதிவிபத்துக்களும் அதிகரிப்பதற்கு இது காரணமாகின்றது.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

### பல்கலைக்கழக சம்பவ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
னும் எமது இரு மாணவர்களின் இழப்பும் ஈடு செய்ய முடியாததாகும். இந் நடவடிக்கை கண்டனத்துக்குரியது.

பல்கலைக்கழக மாணவர்கள் தமது உயிருக்கு உத்தரவாதம் கோரிப் போராடுவதில் எந்தத் தவறும் இருக்க முடியாது. ஆனல் இத்தகைய படுகொலைகளை தவிர்ப்பதற்கான வழிவகைகளிருந்தும் மாணவர்களைத் திசைதிருப்பி படுகொலைகள் தொடர்ந்து நிகழ்வதற்கான முயற்சிகளைப் பல்கலைக்கழகத்தினுள்ளேயும் வெளியேயும் உள்ள சில அராஜகசக்திகள் மேற்கொண்டு வருகின்றன. இது பெரும்பான்மை மாணவர்களின் விருப்பத்திற்கு மாறுனது.

பல்கலைக்கழக மாணவர்களே! ஆசிரியர்களே! இவ் 5 வருட போராட்ட காலத்தின் போதும் நீங்கள் அனுபவித்த இன்னல்கள், துன்பங்கள் அளப்பரியவை என்பதை நாங்கள் உணர்கின்றோம் ஈழதேசத்தின் பல நியாயபூர்வமான போராட்டங்களுக்குத் தனது ஆதரவை யாழ் பல்கலைக்கழகம் நல்கியுள்ளது. ஈழ மக்களின் பல்வேறு போராட்டங்களுடன் தன்னை இணைத்துக்கொண்ட சமூகப் பிரக்ஞை உள்ள பல்கலைக்கழகமாகவே அது தொழிற்பட்டது. இப் பாரம்பரியம் பேணப்பட வேண்டுமென்றே அவாவுறுகிறோம் இவ்விடயம் உங்கள் கைகளிலேயே உள்ளது. இன்றைய பிரதான எதிரிகளை இனங்கண்டு போராடுங்கள். ஈழதேச மக்களின் இன்றைய உடனடித் தேவை அமைதி, சமாதானம், ஜனநாயகம் என்பதை நீங்கள் மறுக்கமாட்டீர்கள்

இப்படி அத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வடிவாம்பிகை முருகேசம்பிள்ளை

திருமதி வடிவாம்பிகை முருகேசம்பிள்ளை காலமாகிவிட்டார் இவர் காலம் சென்ற M தவநாதன் [Doctor]. திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணி விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), திருமதி நித்தியானந்த தேவி இரத்தினசிங்கம் (ஆயுள்வேத வைத்திய சாலை யாழ். மாநகர சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. சி. இரத்தின சிங்கத்தின் மாமியாருமாவார். ஈமக்கிரியை 05 - 02 - 1989 பி ப. 2 மணிக்கு அன்னரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணி
சச்சேரி கிழக்கு. 14, முன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (9469)

### குப்பிளான் உயர்திரு காசிப்பிள்ளை நல்லையா

குப்பிளான் உயர்திரு காசிப்பிள்ளை நல்லையா அவர்கள் 4-2-1989 சனிக்கிழமையன்று சிவபதமடைந்துவிட்டார்

குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலய பரிபாலனசபைத் தலைவரும், மலாயன் பென்ஷனியருமான இவர் கனகாம்பிகையின் அருமைக் கணவரும் திருமதி ஞானலக்ஷ்மி - ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (ஆசிரியை பளை மகாவித்தியாலயம்) திருமதி சிவகங்கை - சிவசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (ஆசிரியர், பளை மகாவித்தியாலயம்) திரு. வை சிவசுப்பிரமணியம் (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், வலந்துஜா, சிந்துஜா ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் குப்பிளான் பென்ஷனர் இல்லத்தில் 4-2 89 சனிக்கிழமை பி. ப. 3. 00 மணிக்கு நடைபெற்றது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

பென்ஷனர் வீடு, குப்பிளான் ஏழாலை
தகவல்: ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (மருமகன்)
(9351)

### செல்வன கிருஷ்ணபிள்ளை கிரிதரன்

(சென்மேரிஸ் வித்தியாலய பழைய மாணவன்)

கிருஷ்ணபிள்ளை கிரிதரன் மேற்குஜேர்மனியில் காலமானர். இவர் கிருஷ்ணபிள்ளை சனகாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும், சிறிவேணி, கல்யாணி விருஷ்னி, தர்சினி, சுதாகரன் ஆகியோரின் அருமைச் சகோதரரும், ஆவார். துரைசிங்கம்- தவமணிதேவி, ஜீவரட்ணம் - அன்னம்மா, மகேந்திரன்- ஜெயமணி (சிங்கப்பூர்], சிவேந்திரா பிரபாவதி (ஜேர்மனி) சுரேஷ் - கௌரி, விங்கேஸ்வரன் ஆகியோரின் அன்புப் பெருமகனும், சிவலிங்கம் கனகம்மா, உருத்திரன் -பதமாவதி, சிவமூர்த்தி - லீலாவதி (கனடா), லலிதாவதி- செல்வா (பிரான்ஸ்), ரேஹவதி-செல்வம் (இந்தியா). தியாகு- ஜானகி, ஆகியோரின் அன்பு மருமகனும், முருகதாஸ், பிரேமதாஸ், மைதிலி. ஷைமினி. திலீபன், சகுந்தலா, ஜீவகாந்தன் ஜீபரஜனி, அனுசியா, பார்த்திபன் ஜீபதஸ், விஜிதா, ஜெகனி. ராஜகுமார், பரமகுமார் ஆகியோரின் அருமைச்சகோதரரும், பிரதீபா, கண்ணன் (ஜேர்மனி), ஆகியோரின் அருமை மைத்துனரும், இராசம்மா, செல்லம்மா, அன்னரட்ணம், ருக்மணி, Dr சிவராஜா, பொன்னுத்துரை, அப்புத்துரை, அப்பையா, பொன்னையா அவர்களின் பேரனும் ஆவார் அன்னரின் இறுதிக்கிரியைகள் இல 7 சிரும்பியடி வீதி, யாழ்ப்பாணத்தில் 06-02 89 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றுர், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(C/1443)
தகவல்: பெற்றோர்.




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ... நாவலர் வீதி. 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 05 - 02 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt.) Ltd. 292/2 Navalar Road, Jaffna. Sunday 05th February 1989.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org